உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்

www.aanmeegamalar.com

e-magazine

வெளியிடும்

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-8 இதழ்-190

நவம்பர் 1-15 2025




## மனித இனத்தை சின்னாபின்னமாக்கும் கலிபுருஷனுக்கு எட்டு இடங்களில் தங்குவதற்கு அனுமதி கொடுத்த

# பரீட்சித்து அரசன்

# பிரசாதங்கள் தீர்த்தங்களை எப்படி பெறவேண்டும்?

ஆலயங்களில் வழங்கும் பிரசாதங்களை இரண்டு கைகளால் பெற்று இடது கையில் வைத்துக்கொண்டு வலது கையால் கொஞ்சமாக எடுத்து சாப்பிட வேண்டும். இங்ஙனம் செய்யாதவர்கள் அடுத்த பிறவியில் விலங்காகப் பிறப்பார்கள் என்று புராணங்கள் சொல்கின்றன.

பெருமாள் கோயிலில் துளசி தீர்த்தம் கொடுப்பார்கள். ஒருசிலர் அதை ஒரு கையால் வாங்குவார்கள். இன்னும் ஒருசிலர் வாங்கியதை தனது கையில் வடித்து விடச் சொல்லுகிறார்கள். அது சரியானது அல்ல. விலங்குகள்தான் வாயினால் சப்பி சாப்பிடக்கூடியவை. ஏனென்றால், அவற்றுக்கு கைகளால் எடுத்து வாய்க்குள் வைத்துக்கொள்ளத் தெரியாது. ஆனால், நமக்கு இறைவன் இரண்டு கைகளை கொடுத்திருக்கிறான்.

அது மட்டுமில்லாமல், தீர்த்தம் வழங்கும்போது அதனை இடது கைக்கு மேல் வலது கையை வைத்து உள்ளங்கையில் தீர்த்தத்தை விடச் சொல்லி வாங்கிப் பருக வேண்டும். உள்ளங்கையில் அத்தனை தெய்வங்களும் குடியிருப்பதாக ஐதீகம். அதனால்தான் எழுந்தவுடன் நாம் உள்ளங்கையை பார்க்க வேண்டும் என்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

# ஸ்ரீரங்க யாத்திரை எப்போது முடியும்



ஸ்ரீ ரங்கம் செல்பவர்கள் நிச்சயம் அறிந்திருக்க வேண்டிய செய்தி இது. நிறைய பேருக்கு இது தெரியாது. வைகுண்டம் சென்றால் பெருமாள் கேட்பாராம் ஸ்ரீரங்கம் சென்று வந்தாயா என்று. அதற்கு சாட்சி என்ன என்று கேட்டால் இந்த நான்கு சாட்சியங்களை கூறவேண்டுமாம்

அவை 1. கண் இல்லாத பல்லி, 2. வால் இல்லாத குதிரை, 3. ரெக்கை இல்லாத மீன், 4. ஒற்றை கம்பம் கருடன். ஆகவே இதையும் பார்த்தால்தான் ஸ்ரீரங்க யாத்திரை முடியும்.

# மிகச் சிறிய லிங்கம்

வேடன் ஒருவன் கிழங்கு அகழ்ந்து எடுப்பதற்காக மலையுச்சி யில் இரும்புக் கருவி யைக் கொண்டு தோண்டிய போது குபீர் என ரத்தம் கொப் பளித்ததாம்.

அதை மேலும் தோண்டிய போது அழகிய சிவலிங்கத் திருமேனி தெரிய வந்தது. அன்று முதல் மக்கள் அச்சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து வந்தனர்.

காயம் ஏற்பட்டதன் காரணமாக வெந்நீரில் அபிஷேகம் செய்தனர். அது இன்றும் மலை மேல் உள்ள இறைவனுக்கு வெந்நீர் அபிசேகம் நடைபெற்று வருகிறது.

இத்திருக் கோவிலின் பெயர், அருள்மிகு கனககிரீசுவரர் திருக்கோயில், தேவிகாபுரம் 606 902, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ளது.

சுயம்புத் திருமேனி மிகவும் சிறிய அளவில் கண்ணுக்கு தெரியும் அளவில் இருப்பதால் அருகிலேயே காசிவிசுவநாதர் லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு காலங்காலமாக பூஜைகள் நடந்து வருகின்றன. இந்த வேடன் கதை, செவிவழிச் செய்தி ஆகும்.



e-magazine
aanmeegamalar.com

# ராமதாசருக்கு மகாவிஷ்ணு கொடுத்த சக்ராயுதம்

# பத்ராச்சலத்தில் தரிசிக்கலாம்



இந்த சக்கரத்தைப் பார்ப்பது ஒரு வரப்பிரசாதம். இது வைகுண்டத்திலிருந்து விஷ்ணுவால் அனுப்பப்பட்ட சுதர்சன சக்கரம்.

பத்ராசலம் ஸ்ரீ சீதாராமச்சந்திர சுவாமி கோயிலின் கருவறையில் அமைந்துள்ள சுதர்சன சக்கரம் யாராலும் செய்யப்பட்டது அல்ல.

அது எப்படி வந்தது? பக்த ராமதாஸ் கோயிலைக் கட்டிய பிறகு, அவர் சிறந்த உலோகச் சிற்பிகளைக் கொண்டு வந்து கோயிலின் மேல் சுதர்சன சக்கரத்தைப் பிரதிஷ்டை செய்து, அவர்களைச் சுதர்சன சக்கரத்தைச் செய்ய வைத்தார். ஆனால் அவர்கள் எத்தனை முறை முயற்சித்தாலும், அது உடைந்து விடுகிறது அல்லது சரியாகப் பொருந்தவில்லை.

அன்று இரவு, கலக்கமடைந்த ராமதாஸின் கனவில், ஸ்ரீ ராமச்சந்திரன் தோன்றி, ''பக்தரே..!! சுதர்சன சக்கரம் என்பது சாதாரண மனிதர்களால் கட்ட முடியாத அளவுக்குப் பெருமை வாய்ந்த ஒன்று. அதனால்தான் நான் என்னுடைய சுதர்சன சக்கரத்தை உனக்குத் தருகிறேன். அது கோதாவரியில் அமைந்துள்ளது. அதைக் கொண்டு வந்து நிறுவுங்கள்'' என்றார். மறுநாள், ராமதாஸ் நீச்சல் வீரர்களுடன் தேடினார். ஆனால் அது தென்படவில்லை.

ராமர் மீண்டும் அவரது கனவில் தோன்றி, ''என் மீது மிகுந்த பக்தி கொண்டவர்களுக்கு மட்டுமே அது தெரியும்'' என்றார். ராமதாசர் தாமே சென்று கோதாவரி மாதாவை வணங்கி, பகவான் ராமச்சந்திரரைப் புகழ்ந்து, கோதாவரியில் தனது கைகளை வைத்தார். அவர் வெளியே வந்ததும், சுதர்சன சக்கரம் வந்து அவர் கைகளில் நின்றது. அந்த சுதர்சன சக்கரத்தைத்தான் இப்போது நாம் காண்கிறோம்...



e-magazine
aanmeegamalar.com

# ஆத்மார்த்தமான பக்தியும் கடமைக்கு வணங்கும் பக்தியும்

கடவுளை வணங்கினால் நம் அறிவிற்கு ஏற்ப அனைத்தும் நன்மையாக நடைபெறவேண்டும் என்ற எண்ணத்தில்தான் பெரும்பாலானோர் கடவுளை வணங்குகிறோம்.

இதுபோன்ற எண்ணம் ஒரு குறிப்பிட்டகால இடைவெளியில் வாழ்கையில் வெறுமையை ஏற்படுத்தும், என்னதான் கடவுளை வணங்கி னாலும் எந்த நன்மையும் விளையவில்லை, துன்பம் தான் ஏற்படுகிறது என்று வெளிப்படையாக புலம்பவும் ஆரம்பித்து விடுகிறோம்.

இன்றைய காலகட்டத்தில் இந்த புலம்பலால் பெரும்பாலானோர் ஆத்மார்த்த பக்தி என்பதை கைவிட்டு கடமைக்கு கடவுளை வணங்குவதாகவே தெரிகிறது.

இந்த நிலை போக்கவேண்டுமானால்,இதிகாச, புரணாங்கள், தெய்வ லீலைகள் போன்றவற்றை, சமயம் கிடைக்கும்போது நாம் அவசியம் படித்தால் ஓரளவு தெளிவு கிடைக்கும்.

மனிதனாக பிறந்த அர்ஜூனனுக்கு அவதார புருஷன் கீதையை உபதேசித்த பின்னர் கூட அர்ஜூனன் மனதில் கடவுளை பற்றிய சந்தேகம் எழுந்தது என்பதை மஹாபாரதம் வெளிப்படையாக கூறுகிறது. அப்படி இருக்க சாதாரண வாழ்வு வாழும் நம் நிலை...



e-magazine
aanmeegamalar.com



e-magazine
aanmeegamalar.com

நாம் கடவுளை வணங்குகிறோம், ஆனால் உண்மையாக, ஆத்மார்த்தமாக, சரணாகதி தத்துவத்தை மனதார ஏற்றுக் கொண்டு கடவுளை வணங்குகிறோமா? என்பதை ஆராய்ந்து பாருங்கள்.

சரணாகதி தத்துவத்தை மஹாபாரதம் அருமையாக வொல்லியிருக்கிறது.

பாரதப் போர் முடிந்த 19ஆம் நாள்!

அந்தக் கால வழக்கப்படி, போரில் வென்ற மஹாரதர்களுக்கும், மன்னர்களுக்கும் மாலை மரியாதை செய்யும் விழா ஒன்று நடக்கும்.

போரில் பங்கேற்ற தேர்கள் வரிசையாக நிறுத்தப்படும். தேரோட்டிகள் கீழே இறங்கி, மண்டியிட்டு நிற்பார்கள்.

மன்னன் அல்லது மஹாரதர்கள் கீழே இறங்கியதும், தேர்ப்பாகன் மன்னனை வணங்கி, மாலையிட்டு, வெற்றி கோஷம் முழங்குவான்.

அதன்பிறகு, போரில் வெற்றி தேடித்தந்த தேர்ப்பாகனுக்கு மன்னன் அல்லது மஹாரதர்கள் பொன்னும் பொருளும் சன்மானமும் தந்து கௌரவிப்பார்கள்.

குருக்ஷேத்திரப் போர் வெற்றிகரமாக முடிந்தபின், வெற்றி கண்ட பாண்டவ சகோதரர்களுக்காக இந்த விழா ஏற்பாடாகி இருந்தது.

தர்மன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐவரது ரதங்களும் வரிசையாக நின்றன.

மரியாதை விழாச் சடங்குகள் ஆரம்பமாயின.

தர்மனுடைய தேரின் முறை முடிந்தபின், பீமனது சாரதி அவனை வணங்கி வாழ்த்தினான்.

பரிசாக விலை உயர்ந்த ரத்தினமாலையை பாகனுக்கு அணிவித்து கௌரவித்தான் பீமன். மேலும், பூமியும் பொன்னும் பொருளும் வழங்கினான். வெற்றி கோஷங்கள் வானைப் பிளந்தன.

அடுத்தது, அர்ஜுனன் ரதம். சாரதியோ பகவான் ஸ்ரீகிருஷ்ணன். 'யாருக்கும் கிட்டாத மாபெரும் பேறு தனக்குக் கிடைக்கப்போகிறது.

பகவான் கிருஷ்ணனே தன்னை வணங்கிப் பாராட்டப் போகிறான்' என்று எண்ணி, ஒரு கணம் தன்னை மறந்த நிலையில் இறுமாப்போடு, அந்த அற்புத தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான் அர்ஜுனன்.

ஆனால், கண்ணன் தேரைவிட்டு இறங்கவில்லை. அர்ஜுனன் திகைத்தான்.

'பெருமையோ சிறுமையோ பாராது, கடமையை நிறைவேற்ற வேண்டும்' என்று கீதையில் தனக்கு உபதேசித்த கண்ணன், தேர்ப் பாகனுக்குரிய கடமையைச் செய்ய ஏன் தயங்க வேண்டும் என்று நினைத்தான் அர்ஜுனன்.

அப்போது பகவான் கிருஷ்ணன், அர்ஜுனனின் அறியாமையை எண்ணி நகைத்தார்.

"அர்ஜுனா! இந்தத் தேர் மட்டும் இந்தச் சடங்குக்கு விதிவிலக்கு.

முதலில் நீ இறங்கு!'' என்று கட்டளையிட்டார்.

கண்ணனின் வார்த்தையை மீறாத அர்ஜுனன்,

அக்கணமே தேரில் இருந்து கீழே இறங்கினான்.

அதேநேரம், 'தன் சகோதரர்களுக்குக் கிடைத்த கௌரவம் தனக்குக் கிடைக்கவில்லையே' என ஒரு கணம் ஏங்கினான்.

"கர்மயோகம்' என்ற பகுதியாகக் கடமையைப் பற்றி அத்தனை தத்துவங்களைச் சொன்ன கண்ணன், ஒரு தேர்ப்பாகனாக பணி யாற்றுவதற் குரிய கடமையைச் செய்ய ஏன் தயங்குகிறான்?

இதனால் மஹாரதனான எனக்கு ஏற்படும் அவமானத்தை ஏன் அவன் எண்ணிப் பார்க்க வில்லை?

நான் கண்ணனை என்னுடைய தேர்ப் பாகனாக ஏற்றுக்கொண்டதால்தானே, எல்லோர் முன்னிலையிலும் எனக்கு இந்தச் சிறுமை ஏற்பட் டுள்ளது?' என்று எண்ணி, மனம் குமுறினான் அர்ஜுனன்.

அர்ஜுனனின் மனோநிலையைத் தன் ஞானத் தால் அறிந்தார் ஸ்ரீகண்ணன். அடுத்த விநாடியே தேரிலிருந்து கீழே இறங்கினார். அதே விநாடியில், தேர்க் கொடியில் இருந்த ஆஞ்சநேயரும் விலகி மறைந்தார்.

கண்ணன் தேரைவிட்டு இறங்கிய மறு விநாடியே அர்ஜுனனின் தேர் குபீரென்று தீப் பிடித்து, அக்னி ஜுவாலையுடன் எரிய ஆரம்பித் தது. எல்லோரும் திகிலோடும் ஆச்சரியத்தோடும் பார்த்தனர்.

யாருக்கும் எதுவும் புரியவில்லை.

''அர்ஜுனா! இந்த பாரத யுத்தத்தில் உன் எதிரிகள் அனைவரின் தாக்குதல்களும் உன் ரதத்தின் மீதுதான் குறிவைத்து நிகழ்த்தப்பட்டன.

அவர்கள் போரில் எய்த அஸ்திரங்கள், ஏவி விட்ட தீய மந்திரங்கள், அனுப்பிய தீய சக்திகள் அத்தனையையும் தடுத்து நிறுத்தி, யுத்தம் முடியும்வரை இந்தத் தேருக்கு உயிர் கொடுத்துக் காப்பாற்றிக் கொண்டிருந்தேன்.

நான் சாரதியாக அமர்ந்துகொண்டிருந்த தால்தான், இந்தத் தீய சக்திகள் இதுவரை செய லற்றிருந்தன. படைக்கப்பட்ட பொருள்கள் அனைத்துக்கும் ஆரம்பமும் முடிவும் உண்டு.

இந்தத் தேரின் முடிவு ஏற்படும் தருணம் வந்ததை உணர்ந்தேன்.

நான் முதலில் இறங்கினால் இந்தத் தீய சக்திகள் செயல்படத் தொடங்கிவிடும். அந்த விநாடியே தேர் தீப்பிடித்து எரிந்து சாம்பலாகும் என்பதையும் அறிந்தேன்.

இப்போது புரிகிறதா, நான் முதலில் இறங்கி யிருந்தால், நீ இந்தத் தீயில் சிக்கியிருப்பாய்.



இப்போதும் உன்னைக் காப்பாற்றவே இந்தத் தேரை விதிவிலக்காக்கி, உன்னை முதலில் இறங்கச் சொன்னேன்!

தேர்ப் பாகனாகப் பணிபுரிந்த நான் உன்னை வணங்கி, வாழ்த்தி, நீ தரும் சன்மானத்தைப் பெறத் தயங்குவதாக நீ நினைத்தாய். என் எல்லாச் செயல்களுக்கும் ஒரு காரணம் காரியம் உண்டு என்பதைப் பல சந்தர்ப்பங்களில் நீ அறிய வாய்ப்பளித்து இருக்கிறேன்.

இருந்தாலும், உன்னுடைய சுயகௌரவத்தால் உன் சிந்தனை சற்று நேரம் கலங்கி இருந்தது.

அது தவறு. இதோ... உன்னை வணங்க நான் சித்தமாயிருக்கிறேன்'' என்று, நீண்ட விளக்கம் தந்தார் ஸ்ரீகண்ணன்.

அவர்கூறிய கடைசி வார்த்தைகள் அர்ஜுனன் காதில் விழவில்லை. காரணம் அவர் கால்களில் அர்ஜுனன் வேரற்ற மரம் போல விழுந்து கிடந் தான்.

நாம் சரணாகதி தத்துவத்தில் கடவுளை சரணடையும்போது ஒவ்வொரு விஷயத்தையும் கடவுள் நம்மிடம் நேரில் வந்து விளக்கமளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்காமல், நாம் நமது கடமையை, கடவுளைப்பற்றிய சிந்தனையுடன் செய்துகொண்டிருந்தால் மட்டும் போதும், நமக்கு கிடைக்க வேண்டியதை இறைவன் கண்டிப்பாக கொடுத்தே தீருவான் என்ற நம்பிக்கையுடன் இறைவனை சரணடைவோம்.

பலனை அனுபவிக்கும் போது நம் மனதில் தான் என்ற அகங்காரமோ, கடவுளைப்பற்றிய வெறுப்புணர்வோ வராமல் பார்த்துக் கொண்டாலே போதும்.

e-magazine
aanmeegamalar.com

15 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த

# முஞ்சி கேசமுனிவர் ஜீவசமாதி!

நாம் பல்வேறு முனிவர்களைப் பற்றி கேள்விப் பட்டிருப்போம் ஆனால் இன்றும் ஒருசில முனிவர் கள் பெயரைக்கூட தெரியாமலேயே அவர் களை வணங்கி வருகின்றோம். அந்த வகையில் முஞ்சி கேசமுனிவர் என்ற முனிவர் மிகப் பழமையான ஆதி முனிவராக போற்றப்படுகிறார்.

சரி இந்த மூஞ்சிகேச முனிவரைப் பற்றி பார்ப் போம்...

சிவனின் கழுத்தில் இருக்கும் கார் கோடகன் எனும் பாம்பு ஒருநாள் சிவனின் கையிலேயே விஷத்தை கக்கி விடுகிறான். அதனால் சிவனின் சாபத்தை கார்கோடகன் பெற்றான்.

தனது தவறை பின்னர் உணர்ந்து வருந்தி, திருந்திய கார்கோடகன் ஈசனிடம் மன்னிப்பு கேட்க அந்த சாபத்திற்கு பிராயச்சித்தமாக பூமிக்கு சென்று பல சிவ ஷேத்ரங்களை வழிபட சொல்லி கார்கோடகனுக்கு சிவன் கட்டளை இட்டார்.

அவ்வாறு பல ஷேத்ரங்களை வழிபட்ட பின்னர் நிறைவாக திருவாலங்காட்டில் என்னை நோக்கி தவமிருக்கும் சுனந்த முனிவர் எனும் மகா முனிவரை நீ பணிந்து வணங்க வேண்டும். அவரின் ஆசியும், கடைக்கண் பார்வையும் உன் மீது பட்ட அந்த நொடியில் உன் சாபம் நீங்கும்.

சாபம் நீக்கிய அந்த நொடியே நான் அங்கு தோன்றுவேன் என்று சிவபெருமான் சொல்ல அதன்படி கார்கோடகன் கார்கோடக முனிவராக இந்த பூமிக்கு வந்து பல சிவ ஷேத்ரங்களை வழி படுகிறார்.

இவ்வாறு கார்கோடகன் வழிபட்ட இடம் தான் கோடன் பாக்கம் ஆகி அது பின்னர் கோடம் பாக்கமாக மாறியது. கோடம்பாக்கத்தின் ஒரு பகுதி பின்னர் வடபழனி ஆனது.

தற்போது வடபழனி பகுதியில் இருக்கும் வேங்கீஸ் வரர் கோவில் கார் கோடக முனிவர், பதஞ்சலி, வியாக்ர பாதர் முத லான பல



முனிவர்கள் வழிபட்ட மிகப் பழமையான கோவிலாக இன்றும் திகழ்கிறது. இத்திருக்கோவில்களில் வழிபட்ட பின், நிறைவாக திருவாலங்காடு வந்த கார்கோடகனுக்கு சுனந்த முனிவரின் ஆசி கிடைத்து அதனால் கார்கோடகனின் சாபம் நீங்கியது.

பெரும்பாலும் சுனந்த முனிவரை பல்வேறு விஷயங்களில் நாம் அறிந்திருப்போம் ஆனால் முஞ்சிகேச முனிவர் என்ற பெயரை இதுவரை நாம் அறிந்திருக்க மாட்டோம். சரி யார்? இந்த முஞ்சிகேச முனிவர் என்பதையும் அறிந்து கொள்வோம்.

சுனந்த முனிவர் கடுந்தவம் செய்து அதனால் அவரின் தலைமீது முஞ்சிபுல் எனப்படும் ஒருவகை புல் படர்ந்து, வளர்ந்தது. இதன் காரணமாக தான் அவர் முஞ்சிகேசர் எனும் பெயர் பெற்றார். கேசம் என்றால் தலை.

சிவனுக்கும், காளிக்கும் நடந்த நடன போட்டியை நேரடியாக பார்த்தவர் இந்த முஞ்சிகேச முனிவர். விஷ்ணு வாமன அவதாரம் எடுத்த பொழுது அவருக்கு நடந்த உபநயன சடங்கில் முஞ்சிகேச முனிவர் கலந்து கொண்டார் என்றும் சொல்லப்படுகிறது.

கார்கோடகனுக்கு ஏற்பட்ட சாபத்தையே போக்கிய அந்த முஞ்சிகேச முனிவர் எத்தகைய ஒரு தபஸ்வியாக, ஆற்றல் மிக்கவராக இருக்க வேண்டும். சுனந்த முனிவரையே முஞ்சிகேச முனிவராக வணங்கியதற்கு பல்வேறு சாட்சிகள் உள்ளது. இதற்கு சாட்சியாக திருவாலங்காட்டில் முஞ்சிகேச முனிவர் வீற்று இருக்கிறார்.

சென்னை காளிகாம்பாள் கோவில் அருகே இருக்கும் கச்சாலீஸ்வரர் எனும் பழமையான கோவிலில் முஞ்சிகேச முனிவருக்கு சந்நிதி இருக்கிறது.

அதேபோல் தமிழ்நாட்டில் சுமார் 10,15 பழமையான சிவன் கோவில்களில் முஞ்சிகேச முனிவருக்கு சந்நிதி உண்டு.

பஞ்ச சபைகளில் மூத்த சபையாக விளங்கும் திருவாலங்காடு ரத்தின சபை சிவன் கோவில் அருகே இவரது ஜீவசமாதி தனி கோவிலாக இருக்கிறது.

இவரின் ஜீவசமாதி தோராயமாக 15 ஆயிரம் ஆண்டுகள் என்று அறியப்படுகிறது.

திருவலங்காடு ரயில் நிலையத்திலிருந்து சுமார் 5.3 கி.மீ தொலைவிலும், அரக்கோணத்திலிருந்து 15 கி.மீ தொலைவிலும், திருவள்ளூரிலிருந்து 20 கி.மீ தொலைவிலும், காஞ்சிபுரத்திலிருந்து 40 கி.மீ தொலைவிலும், சென்னையில் இருந்து 70 கிலோமீட்டர் தூரத்தில் தான் திருவாலங்காடு இருக்கு.

ராகு, கேது தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் முஞ்சிகேச முனிவரின் ஜீவசமாதிக்கு சுத்த மான மரச்செக்கு நல்லெண்ணெய்யை சிறிது காணிக் கையாக கொடுத்து அங்கே சில நிமிடங்கள் அமர்ந்து தியானம் செய்யுங்கள். நிச்சயமாக உங்களின் ராகு, கேது தோஷம் சரியாகும்.



உங்கள் பகுதியில் உள்ள கோவில் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள், போன்றவற்றை

# tabloid வடிவில்

4, 8, 12, 16 பக்கங்களில்

**இதுபோன்ற சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்**

தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!

தொடர்ப்பு கொள்ளவும்
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203



# மனிதர்களின் முற்பிறவி என்ன

## அகத்தியர் கூறும் ஏழு பிறவிகள்



ஏழு பிறவி என்றால் என்ன என்பது குறித்து மாமுனிவர் அகத்தியர் பெருமான் விரிவாக கூறியுள்ளார் அதைப் பார்ப்போம்...

- ❖ கடவுள் மனிதனாகப்பிறப்பது
- ❖ மனிதன் மனிதனாகப்பிறப்பது
- ❖ மிருகம் மனிதனாகப்பிறப்பது
- ❖ பறவைகள் மனிதனாகப்பிறப்பது
- ❖ நீர் வாழ்வன மனிதனாகபிறப்பது
- ❖ பூச்சிபுளு மனிதனாகப்பிறப்பது
- ❖ மரம்செடிகள் மனிதனாகபிறப்பது

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம் .காம்

இப்படியாக மனிதப்பிறவிகள் ஏழுவகையாக பிரிக்கப்பட்டு அப்பிறவிகளில் செய்யக்கூடிய பாவபுன்னியங்களுக்கு ஏற்ப மாறிமாறி பிறந்தும் இறந்தும் வாழ்கின்றோம்

### பிறவி–1

கடவுள் மனிதனாகப் பிறந்தால் நீதிகளையும் தர்மங்களையும் போதித்து ஆலயங்களை எழுப்பி அங்கே தானதர்மங்கள் செய்வர் பல்லுயிர்களும் நலம் வாழ தவம் தியானம் யாகம் பலசெய்வார்.

### பிறவி–2

மனிதன் மனிதனாகப்பிறந்தவர் நீதி நியாய மாய் வாழ்வார் தான தர்மங்களை செய்வார் மரங்களை நடுவார் மிருகம் பறவைகளுக்கு பசி யினை போக்க வழிவகை செய்வர்.

### பிறவி–3

மிருகம் மனிதனாகப்பிறப்பது எந்தநேரமும் உழைப்பான் ஆனால் அதனை சரிவர பயன்படுத் தாமல் வீன் செய்து விடுவார் நீதி நியாயம் எதையும் பார்காமல் எவர் பொருளானாலும் எடுப் பார்கள் மற்றவர் மனதை துன்புறுத்துவர்.

### பிறவி–4

பறவைகள் மனிதனாகப்பிறப்பவன் எப்போது உழைக்காமலே அடுத்தவர் பொருளை பறிக்கவே திட்டமிடுவார் மிருகம் பறவைகளை உயிரென்றும் பாராது அறுத்து உன்பார் நீநி தர்மம் எதையம் செய்யமாட்டார்கள்.

### பிறவி–5

நீர்வாழ்வன மனிதனாகப்பிறந்தால் அடுத்த வரை பழித்தல் நயவஞ்சகம் செய்தல் புறம்பேசுதல் இழிவாய் பேசுவது குற்றச்செயல்கள் செய்வது இதுபோன்றவைகளை செய்வார்கள்.

### பிறவி–6

புளுபூச்சி மனிதனாகப்பிறந்தால் வீன்பழி போடுதல் எந்த வார்த்தையும் தவறாகவே வரும் எல்லோரையும் மகான்களையும் ஏன் கடவுளையும் கூட இழிவாகப் பேசுவார் கொலை களவும் செய்வார்கள்.

### பிறவி–7

மரம் செடி மனிதனாகப்பிறந்தால்.

பூமியில் ஜடமாய் பிறந்து வாழும் எந்தவேலையும் செய்யாது எதற்காக வாழ்வது என்றே அறியாமல் வாழும் பலவகை தவறுகளை செய்தாலும் மறந்துவிட்டு செல்வார் எதை வேண்டுமானாலும் தின்பார்கள் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு போவார்கள்.

இப்படியாக சித்தர்பெருமான் கூறியுள்ளார்.

குசேலன், பாஞ்சாலி, அர்ச்சுனன் மூவரை கொல்ல காத்திருந்த

# பிங்கலை பாட்டியின் கிருஷ்ண பக்தி



அர்ச்சுனனின் மனம் பாரதப் போரில் வெற்றி பெற்ற மமதையில் திளைத்துக் கொண்டிருந்தது.

“கண்ணன் எனக்குத் தேரோட்டினான். தெய்வம் என் அருகே இதோ இப்போது கூட அமர்ந்து கொண்டிருக்கிறது. என் பக்தியின் வலிமையே வலிமை. என்னை விடக் கண்ணன் மேல் அதிக பக்தி செலுத்துபவர் யார் இருக்க முடியும்?....”

“அப்படி நீயாக முடிவுசெய்து விட முடியுமா? உன்னைவிட என்மேல் கூடுதலாக பக்திசெலுத்துபவர்கள் உலகில் இருக்கக் கூடாதா என்ன?'' கண்ணன் கேட்டான்.

அர்ச்சுனன் திடுக்கிட்டான்.

“என் மனத்தில் ஓடுகிற எந்தச் சிறு நினைவை யும் உடனே படித்து விடுகிறானே கண்ணன்!”

“நீஎன்னை மனத்தில் வைத்து பூஜிக்கிறாய் அர்ச்சுனா! உன் மனத்திலேயே இருக்கும் எனக்கு உன் நினைவுகளைக் கண்டுகொள்வதுசிரமமா?'' கண்ணன் கலகலவென்று நகைத் தான். கண்ணன் மேல் தன்னளவு பக்தி செலுத்து பவர் யாருமில்லை என்ற ஆணவம், தொடர்ந்து அர்ச்சுனன் மனத்தில் பால் ஏடு போல் மிதந்து கொண்டிருந்தது.

உள்ளத்தில் எழும் ஆணவ அழுக்கைப்போக்க பகவானை பக்தி செய்ய வேண்டும். பகவானை பக்தி செய்வது குறித்தே, ஆணவம் எழுமானால் அந்த அழுக்கை எப்படி அகற்றுவது? அர்ச்சுனனின் பக்தி சார்ந்த கர்வத்தை அடக்க வேண்டியது தான். கண்ணன் ஒரு முடிவு செய்தான்.

“அர்ச்சுனா! என் பக்தர்களில் சிலரை நேசிக்கி றேன். சிலரை மதிக்கிறேன். நான் மதிக்கும் பக்தை பிங்கலை இங்கே அஸ்தினா புரத்தின் அருகிலேயே வசிக்கிறாள். அவளைச் சென்று சந்திப்போம் வா!''

“அதற்கென்ன போகலாம். சில பக்தர்களை நேசிப்பதாகவும் சில பக்தர்களை மதிப்பதாகவும் சொன்னாயே? அந்த இரு பக்தர்களிடையே என்ன வேறுபாடு?''

“சுயநலம் சார்ந்து பிரார்த்திப்பவர்களும் என் பக்தர்கள் தான். அவர்கள் வேண்டியதை அருள்கிறேன். அவர்களை நேசிக்கிறேன். எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல் பக்தி செலுத்து பவர்களும் அபூர்வமாகச் சிலர் இருக்கிறார்கள். அவர்களை நேசிப்பது மட்டுமல்ல, மதிக்கவும் செய்கிறேன். சுயநலமற்ற பக்தர்களால் தான் பகவானுக்கே ஆற்றல் கூடுகிறது. நான் மதிக்கும் மூதாட்டியான பிங்கலையை நாம் சந்திப்பதில் வேறொரு நோக்கமும் இருக்கிறது''.

“என்ன நோக்கம்?''

“கர்ணன் நாகாஸ்திரத்தை உன்மேல் பிரயோகம் செய்தபோது உன் உயிரைக் கர்ணனிடமிருந்து காப்பாற்றி விட்டேன். அதுபோலவே பிங்கலையிடமிருந்தும் உன் உயிரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எனக்கிருக்கிறது''.

“பிங்கலை ஒரு மூதாட்டி. வீராதி வீரனான எனக்கு அவளிடமிருந்து எப்படி இறப்பு வர முடியும்?” அர்ச்சுனன் திகைத்தான்.

கண்ணன் நகைத்தவாறே சொல்லலானான்:

“ராமாவதாரத்தில் சபரி போல், கிருஷ்ணா

வதாரத்தில் எனக்கு இந்தப் பிங்கலை. போய் அவளைச் சந்திப்போம். ஆனால், இதே தோற்றத்தில் போனால் உன் உயிருக்கு ஆபத்து நேரலாம். நான் பெண்ணாக மாறுகிறேன்.

நீ தோழியாக மாறு. ஊர்வசியின் சாபத்தால் பிருஹன்னளையாக ஓராண்டு இருந்த உனக்கு பெண்ணாகச் சற்றுநேரம் வேடம் புனைவது சிரம மாக இராது!''



சற்று நேரத்தில் அந்த அரண்மனையிலிருந்து கண்ணனும் அர்ச்சுனனும் ஆகிய இரண்டு தோழிகள் வெளியே புறப்பட்டுச் சென்றார்கள்.

பிங்கலையின் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. தெய்வீக ஒளியுடன் ஒரு மூதாட்டி கதவைத் திறந்தாள். அவள் தான் பிங்கலை என்பதைப் பார்த்தவுடனேயே புரிந்துகொண்டான் அர்ச்சுனன். கண்ணன் பணிவாகச் சொல்லலானான்:

“தாயே! நாங்கள் அடுத்த ஊர் செல்லும் பொருட்டு நடந்துவந்தோம். கால்கள்வலிக்கின்றன. இங்கே சற்று இளைப்பாறி விட்டுச் செல்லலாமா?''

“அதற்கென்ன? உள்ளே வாருங்களேன். நான் பூஜை செய்துகொண்டிருக்கிறேன். பூஜை முடிந்தபிறகு நீங்கள் உணவருந்திவிட்டுச் செல்லலாமே?''

பிங்கலை உள்ளே நடந்தாள்.

“நாங்களும் உங்கள் பூஜையில் கலந்து கொள்ள விரும்புகிறோம்,'' என்றவாறு கண்ணன் அர்ச்சுனனை இழுத்துக்கொண்டு, பிங்கலையின் பின்னே நடந்தான்.

பூஜையறையில் ஒரு பீடத்தின் முன் நின்று பிங்கலை கிருஷ்ண கிருஷ்ண என்று ஜபிக்கலானாள். பீடத்தில் கிருஷ்ண விக்கிரகமும் சிறியதாக ஒரு கத்தியும் நடுத்தர வடிவில் ஒரு கத்தியும் பெரியதாக ஒரு கத்தியும் இருந்தன. விழிகளில் கண்ணீர் வழிய கிருஷ்ண நாமத்தைச் சொன்ன அவள், “என் பூஜை இவ்வளவுதான், வாருங்கள், உண்பதற்கு ஏதாவது தருகிறேன்,'' என்றவாறே திரும்பினாள். கண்ணன் ஆவலோடு கேட்டான்:

“தாயே! கிருஷ்ண விக்கிரகத்தோடு மூன்று கத்திகளையும் பூஜிக்கிறீர்களே? கத்திகள் யாருடையவை?''

“என்னுடையவை தான். நாள்தோறும் கிருஷ்ண நாமத்தை ஜபித்து கத்திகளின்வலிமையை அதிகப்படுத்தி வருகிறேன். வாய்ப்புக் கிட்டும்போது கிருஷ்ணனுக்குக் கொடுமைசெய்த என் விரோதிகளான மூவரைக் கொல்ல வேண்டுமே நான். அதன் பொருட்டுத் தான் இந்த பூஜை!''

“யார் அந்த விரோதிகள் தாயே?''

“என் பிரியமுள்ள கிருஷ்ணனுக்குக் கொடுமை செய்தவர்கள்வேறு யார்? குசேலன், பாஞ்சாலி,அர்ச்சுனன் மூவரும் தான். குசேலரைக் கொல்ல சின்னக் கத்தி. பாஞ்சாலிக்குநடுத்தரக் கத்தி. மாவீரன் என்று தன்னைப் பற்றிப் பிதற்றித் திரியும் அர்ச்சுனனைக் கொல்லத்தான் இந்தப் பெரிய கத்தி!''

அர்ச்சுனனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அர்ச்சுனனைக் கடைக்கண்ணால் பார்த்த கிருஷ்ணன் மேலும் பிங்கலையிடம் கேட்கலானான்.

“அப்படி இந்த மூவரும் கண்ணனுக்கு என்ன கொடுமை செய்தார்கள் தாயே?''

“பின்னே.. குசேலன் அந்தத் தவிட்டு அவலைக் கண்ணனுக்குக் கொடுக்கலாமா? என் கண்ணன் வெண்ணெயை விரும்பித் தின்பவன். வாய் உறுத்தாத ஆகாரம் அது. அவல் என் கண்ணனின் நீண்ட தாமரை இதழ்போன்ற நாவில் புண்ணைத் தோற்றுவிக்காதா? இந்த புத்தி கூட இல்லாமல் பக்தி என்ற பெயரில் அவலை அவனுக்குக் கொடுப்பதாவது?''

“பாஞ்சாலி பாவம் பெண். அவள் எப்படி உங்கள் விரோதியானாள்?''

“கிருஷ்ணனிடம் புடவைகளைப் பெற்றாளே? துவாரகையில் இருக்கும் கண்ணன் அஸ்தினாபுரத்தில் இருக்கும் அவளுக்கு வாரி வாரிப் புடவைகளை அருளினானே? புடவைகளை இழுத்து இழுத்து துச்சாதனன் கைவலிக்க மயக்கம் போட்டு விழுந்தான் இல்லையா? புடவையை இழுத்த துச்சாதனனுக்கே கைவலிக்குமானால், புடவைகளை நிறுத்தாமல் தொடர்ந்து வழங்கிய கண்ணனுக்கு கை எவ்வளவு வலித்திருக்கும்? கண்ணனின் கைகளை வலிக்கச் செய்த பாஞ்சாலியைச் சும்மா விடுவேனா நான்?''

“அர்ச்சுனன் கண்ணனின் பக்தர்களிலேயே தலை சிறந்தவனாயிற்றே? அவன் மேல் ஏன் விரோதம்?''

“அர்ச்சுனனின் பக்தியை நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும். உண்மையான பக்தனாக

இருந்தால் கைவலிக்க வலிக்கத் தேரோட்டச் சொல்வானா? குதிரைகளின் லகானை இழுத்து இழுத்து கண்ணன் கைகள் எத்தனை துன்பப்பட்டிருக்கும்? தேர்க் குதிரைகளை ஓட்டுவது சாமான்யமா? ஊரில் தேரோட்டிகளுக்கா பஞ்சம்? என் கண்ணன் தானா அகப்பட்டான் அந்தக் கடினமான வேலையைச் செய்ய! என் முன்னால் என்றாவது ஒருநாள் அகப்படுவான் அர்ச்சுனன். அன்று பார்த்துக் கொள்கிறேன் அவனை!''

அர்ச்சுனன் முந்தானையால் பதட்டத்தோடு நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொள்வதைப் பார்த்து நகைத்தான் கண்ணன்.

"தாயே! குசேலன் அறியாமல் செய்தான். அவனிடம் தவிட்டு அவலைத் தவிர வேறு பொருள் இல்லை. எந்தப் பிரதிபலனையும் அவன் எதிர்பார்க்கவும் இல்லை. கண்ணனாகத்தான் அவன் கேட்காமலே செல்வத்தைக் கொடுத்தான். சுயநலமற்றவன் என்பதால் குசேலனை மன்னித்து விடுங்களேன்''.

பிங்கலை யோசித்தாள்.

"உன் குரல் கண்ணனின் புல்லாங்குழலைப் போல் இனிமையாக இருக்கிறது,'' என்றவள் பீடத்திலிருந்த சிறிய கத்தியைத் தூக்கி வீசினாள்.

பின்னர், "ஆனால் பாஞ்சாலி சுயநலம் உள்ளவள் அல்லவா? தன் மானம் காக்கத்தானே கண்ணனை வேண்டினாள்?'' என்று கேட்டாள்.

"ஆம் தாயே! பாஞ்சாலிக்குப் புடவை கொடுத்ததில் கண்ணன் கைகள் வலித்தது உண்மைதான். என்றாலும் ஒரு பெண்ணுக்கு மானம் மிகப் பெரிதல்லவா? அதைக் காத்துக் கொள்ள அவள் கொலை கூடச் செய்யலாம் என்று தர்ம சாஸ்திரங்கள் சொல்கின்றனவே? எனவே சுயநலமே என்றாலும், மானம் காக்க வேண்டியதால் பாஞ்சாலியையும் மன்னித்து விடுங்களேன்!''

பிங்கலை சிந்தித்துவிட்டு, "நீ சொல்வது சரிதான்,'' என்றவாறே பீடத்திலிருந்த இரண்டாவது கத்தியையும் கீழே வீசினாள்.

"ஆனால், போரில் தனக்கு வெற்றிகிட்ட வேண்டும் என்னும் உலகியல் சார்ந்தசுயநலத்திற்காக கண்ணனைத் தேரோட்டச் செய்த அர்ச்சுனனை மட்டும் மன்னிக்கவே மாட்டேன். இந்தப் பெரிய கத்தி பீடத்திலேயே இருக்கட்டும்!'' என்றாள்.

"சுயநலம் பிடித்த அர்ச்சுனனை நீங்கள்



கொல்வது நியாயம் என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன்,'' என்றான் கண்ணன்.

அர்ச்சுனனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"எப்படியாவது காப்பாற்று! என்று அவன் பார்வை கண்ணனை இறைஞ்சியது. கண்ணன் நகைத்தவாறே பிங்கலையிடம் சொல்லலானான்: "அர்ச்சுனனைக் கொல்வதில் வேறு ஒரு சிக்கல் இருக்கிறது தாயே? நீங்களோ கண்ணனுக்குச் சின்னத் துன்பம் வந்தால் கூடப் பதறுகிறீர்கள். எப்படியோ அர்ச்சுனன் கண்ணன் மனதைக் கவர்ந்துவிட்டான். அதனால்தானே கைவலியையும் பொருட்படுத்தாமல் தேரோட்டினான்? அர்ச்சுனனை நீங்கள் கொன்றுவிட்டால், உற்ற நண்பனை இழந்து கண்ணன் வருந்துவானே? கண்ணன் வருந்துவது உங்களுக்குச் சம்மதம் தானா? அதனால் போனால் போகட்டும். அர்ச்சுனனின் சுயநலத்தைப் பொருட்படுத்தாது அவனையும் மன்னித்து விடுங்கள்.

பிங்கலை யோசித்துவிட்டுச் சொன்னாள்.

"நீ சொன்ன கோணத்தில் நான் சிந்தித்துப் பார்க்கவில்லை. நீ சொல்வதும் சரிதான். எனக்கு இந்தப் பிறவியிலோ மறுபிறவியிலோ எதுவும் வேண்டாம். முக்தி கூட வேண்டாம். என் கண்ணன், உடல் வருத்தமோ மன வருத்தமோ இல்லாமலிருந்தால், அதுபோதும் எனக்கு. கண்ணனுக்கு மன வருத்தம் தரும் செயலை நான் செய்யமாட்டேன்."

பிங்கலை மூன்றாவது கத்தியையும் பீடத்திலிருந்து எடுத்துக் கீழே வீசினாள். பெண் வேடத்திலிருந்த அர்ச்சுனன், பெண்வேடத்திலிருந்த கண்ணனையும் மூதாட்டி பிங்கலையையும் கீழே விழுந்து வணங்கியபோது அவன் ஆணவம் முற்றிலுமாக அழிந்திருந்தது.



# சோதனைகளை தாங்கு நன்மையே கிடைக்கும்

ஒரு துறவி காட்டு வழியே நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது ஒருமனிதன், அங்கிருந்த மரம் ஒன்றில் கயிறு ஒன்றை மாட்டி, சுருக்கு போட்டுக் கொண்டிருந்தான்.

ஒரு சில வினாடி களில், அவன் கழுத்தை அதனுள்ளே நுழைத்து துக்கில் தொங்க தயாரான போது, “நில்!” என்று கம்பீரமாக உத்தரவிட்டார் துறவி!

அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருங் கெடுத்து ஓடியது.

என்ன காரணத்தால் இந்த மாதிரித் தவறான முயற்சியில் ஈடுபடுகிறாய்?” என்று கேட்டார் துறவி.

சுவாமி, என் வாழ்க்கை முழுவதும் கண்ணீர். பிறந்ததிலிருந்து துன்பம், துயரம், வறுமை. எனக்கு இவ்வுலகில் வாழ தெரியவில்லை. நான் நேர்மையானவன்; உண்மையானவன். எனக்கு பணம் சம்பாதிக்க தெரியவில்லை. எனவே, அவ்வப்போது பட்டினி. வேலை செய்யும் இடங்களில் என் உழைப்புச் சுரண்டப் படுகிறது. என் கூலி குறைக்கப்படுகிறது.

எனக்குரிய கூலியை காலம் தாழ்த்தி தருகின் றனர் அல்லது அலைய விட்டுத் தருகின்றனர். கூலி வாங்க நான் அலையும் போது செலவுக்கு வேண்டிய தொகை, என் குடும்பத்தின் மூன்று நாட்கள் சாப்பாட்டுச் செலவு... இப்படி எத்தனை எத்தனையோ சொல்லலாம்.

நான் ஏழையாகவே உள்ளேன். ஏழையாக இருப்பதைக் குற்றமாக எண்ணவில்லை.

வாழ்நாள் முழுவதும் இந்த துன்பங்களையும், துயரங்களையும் என் கடின உழைப்பால் போக்க முடியவில்லை. எனவே தான் சாக முயற்சித்தேன்; நீங்கள் தடுத்து விட்டீர்கள்,” என்று கதறினான்.

மகனே நான் கேட்கும் கேள்விக்கு நீ பதில் சொல். உலோகங்களிலேயே துய்மையான ஒரு பொருள் என்று பாமர மக்களால் மதிக்கப் படுகிறது.ஆனால், அது விலை அதிகம். அதை ஆபரணமாக்க மனிதர்கள் முயலும் போது என்ன

செய்கின்றனர்.

நெருப்பில் போட்டு உருக்கி, சுத்தியால் தட்டி, நீட்டி, வளைத்து, பின் சிறு உளியினால் செதுக்குகின்றனர். மீண்டும் நெருப்பில் இட்டுக் காய்ச்சுகின்றனர்!

சாதாரண உலோகமான தங்கம், மற்ற உலோகங்களை எல்லாம் விட விலை உயர்ந்தது. தூய்மையானது என தெரிந்திருந்தாலும் அதை எவ்வாறெல்லாம் பாடுபடுத்துகின்றனர்.

பயிர்களில் இனிமையானது கரும்பு என்பது உண்மைதான்! அதைத்தான் நசுக்கி, கசக்கி, பிழிந்து, சாறு எடுத்து, பின், வடிகட்டுகின்றனர். ஆகவே, நாம் இதிலிருந்து தெரிந்து கொள்ளக் கூடிய படிப்பினை என்ன ?

நல்லவற்றுக்கு இப்படிப்பட்ட துக்கமான, கவலை தரக்கூடிய அனுபவங்கள் எல்லாம் உண்டாவது சகஜமான விஷயமே. இதனால் விளைவது இறுதியில் நன்மையே தவிர வேறு எதுவுமில்லை.

சாதாரணமாகப் பசுவின் பாலில் இருந்து பெறப்படுவது என்ன? “தயிர், மோர், வெண்ணெய், நெய் போன்றவை.

இது எப்படி கிடைக்கிறது. பசுவிலிருந்து பாலைக் கறந்தவுடன், அது ஒரு பாத்திரத்தில் ஊற்றப்பட்டு அடுப்பின் மேல் ஏற்றப்பட்டு எவ்வளவு சூடாக்க முடியுமோ அவ்வளவு சூடாகும் வரை காய்ச்சப்படுகிறது.

அதன்பின், அதில் ஒரு துளி எலுமிச்சைச் சாறு விடப்பட்டு புரையிடப்படுகிறது. அது திரிந்து தயிராக மாறுகிறது.

அந்தத் தயிரையும் ஒரு மத்துப் போட்டுக் கடை கடை என்று கடைந்து அதிலிருந்து வெண்ணெய் எடுக்கப்படுகிறது.

மேலே திரண்டு வரும் வெண்ணெய் எடுக்கப்பட்டவுடன், சிறிதளவு நீர் ஊற்றி, அது மோர் ஆக்கப்படுகிறது. வெண்ணெய் அதன் பின் மீண்டும் அக்னிப் பரீட்சைக்கு உள்ளாகிறது. இப்போது அதிலிருந்து நெய் பெறப்படுகிறது. இவ்வளவு ஏன் ?

அது பாலாக இருப்பதால்தான்!

ஆக, நல்லவர்கள், நாணயம் மிக்கவர்கள், நேர்மையானவர்கள், உண்மையை பேசுபவர்களுக்கெல்லாம் இவ்வாறு சோதனைகள் நேரிடுவது சகஜம்.

அறிவாளிகள் இதைப் பொருட்படுத்த மாட் டார்கள். ஆகவே, இந்த சோதனைகளை தாங்கு.



முடிவில் நன்மையே கிடைக்கும்!

வீட்டுக்குப் போ. உன் கடமையைச் செய். பலனை எதிர்பாராதே. அந்தப் பலன் வித்தியாசமான வடிவத்துடன், நீ எதிர்பாராத நாளில், எதிர்பாராத மனிதர் வடிவத்தில் வந்து உன்னைக் காக்கும்,” என்று அவனை ஆசிர்வதித்து அனுப்பினார்.

உள்ளது எதுவோ அதை
இறைவன் கொடுத்ததாக
எண்ணி மகிழ்ச்சியாக
இருங்கள்.
இல்லாதது எதுவோ அது
இனிமேல் இறை வன்
கொடுப்பான் என்று நம்பிக்கை
யோடு இருங்கள்

❖❖❖

கடந்து போன காலத்தை எண்ணி
கவலை கொண்டு இருப்பதில் எந்த
பயனும் இல்லை மகிழ்ச்சி ஒன்றையே
இலக்காக வையுங்கள்

❖❖❖

கிடைக்கும் இடத்தில் பெற்றுக்கொண்டு
கிடைக்காத இடத்தில் கொடுத்து விட்டு
செல்லுங்கள்

❖❖❖

**மகிழ்ச்சி வாழ்கின்ற**
**காலத்தில் இல்லை**
**வாழ்கின்ற விதத்தில்**
**இருக்கிறது**

# ஆலய வழிபாட்டு சாஸ்திர விதிகள்

**இறைவனை எங்கு சென்று வழிபடுதல் சிறப்பை தரும்?**

இறையருளைப் பெற திருக்கோவில்களில் சென்று வழிபடுதல் சிறப்பை தரும்.

❖✶❖✶❖

**கோவிலுக்கு எவ்வாறு செல்ல வேண்டும்?**

குளித்து தூய்மையான ஆடை அணிந்து திருநீரு அணிந்து திருமுறைகளை ஓதி இறைச் சிந்தனையுடன் செல்ல வேண்டும்.

❖✶❖✶❖

**திருக்கோயிலுக்கு சென்ற உடன் என்ன செய்தல் வேண்டும்?**

முதலில் திருக்கோபுரத்தை வழிபட்டு இரண்டு கைகளையும் தலைமீது குவித்து இறைவனின் புகழைப்பாடிக் கொண்டே உள்ளே செல்லுதல் வேண்டும்.

❖✶❖✶❖

**திருக்கோயிலுக்கு உள்ளே சென்றவுடன் என்ன செய்ய வேண்டும்?**

பலிபீடம் முன் விழுந்து வணங்க வேண்டும்.

❖✶❖✶❖

**கிழக்கு நோக்கிய திருக்கோயிலிலும் மேற்கு நோக்கிய திருக்கோயிலும் எந்த திசையில் தலைவைத்து வணங்க வேண்டும்?**

வடக்கே தலைவைத்து வணங்க வேண்டும்.

❖✶❖✶❖

**தெற்கு நோக்கிய கோயிலும் வடக்கு நோக்கிய திருக்கோயிலும் எந்த திசையில் தலைவைத்து வணங்க வேண்டும்?**

கிழக்கே தலைவைத்து வணங்க வேண்டும்.

❖✶❖✶❖

**எந்த திசைகளில் வணங்ககூடாது?**

கிழக்கிலும் வடக்கிலும் கால் நீட்டி வணங்குதல் கூடாது.

❖✶❖✶❖

**எத்தனை முறை விழுந்து வணங்கவேண்டும்?**

மூன்று, ஐந்து, ஏழு ஒன்பது ஆகிய எண்ணிக் கையில் விழுந்து வணங்க வேண்டும்.

❖✶❖✶❖

**திருக்கோயிலில் வழிபாடு செய்யும்போது என்ன செய்ய வேண்டும்?**

இரண்டு கைகளையும் தலையிலாவது மார்பிலாவது குவித்து கொண்டு மனம் கசிந்துருக வழிபாடு செய்ய வேண்டும்.

❖✶❖✶❖

**எந்த காலத்தில் வழிபாடு செய்யகூடாது?**

அபிஷேகம் அமுது படைத்தல் போன்ற காலங்களில் வழிபாடு செய்தல் கூடாது.



e-magazine
aanmeegamalar.com

# கிருத்தி வாசேஸ்வரராக மாறிய கஜாசுரன் உடல்



## மிருத்யுஞ்சயேஸ்வரர்

சிவபெருமான் காசியில் உள்ள பல்வேறு புனித தீர்த்தங்கள் (குளங்கள்), கூப் (கிணறுகள்) மற்றும் வழிபாட்டுத் தலங் களைப் பற்றி மகிழ்ச்சியுடன் விவரித்துக் கொண்டிருந்தார். காலேஸ்வரர் அருகே மிருத்யுஞ்சயேஸ்வரர் இருக்கிறார்.

மிருத்யுஞ்சயேஸ்வரர் லிங்கம் பக்தர் களிடமிருந்து அகால மரணத்தைத்தடுக்கும் திறன் கொண்டது. லிங்கத்தின் அருகாமை யில் கலோதக் கூப் (கிணறு) உள்ளது. கிணற்றில் இருந்து வரும் நீர் அனைத்து நோய்களையும் குணப்படுந்தும் திறன் கொண்டது.

மிருத்யுஞ்சயேஸ்வரர், காசி காண்டத்தில் அப மிருத்யு ஹரேஸ்வரர் என்றும் குறிப்



காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.



e-magazine
aanmeegamalar.com





பிடப்படுகிறார் (அகால மரணத்தைத் தடுக்கும் இறைவன்).

மிருத்யுஞ்சயேஸ்வரரின் இருப்பிடம்

மிருத்யுஞ்சயேஸ்வரர் கோவில் கால பைரவர் கோவிலுக்கருகில் உள்ளது. மற்றும் பிரபலமானது. பிஷேஸ்வரர்கஞ்ச்/ ஜிபிஓ வழியாக மக்கள் இந்தக் கோயிலை அணுகலாம். உள்ளூர் பக்தர்கள் இந்த கோவிலை மிருத்யுஞ்சய் மகாதேவ் என்று அழைக்கிறார்கள் மற்றும் தெய்வம் அந்த பெயரில் மிகவும் பிரபலமானது.

பூஜையின் வகைகள்

கோவில் அதிகாலை 04.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். சிருங்கர் (அலங்காரம்) போன்றவற்றின் காரணமாக கருவறையின் கதவுகள் குறிப்பிட்ட நேரங்களில் மூடப்பட்டிருக்கும். காலை 05:30 மணி, மாலை 6.30 மணிக்கு மூன்று ஆராதனைகள் உள்ளன.

பெயர் குறிப்பிடுவது போல, மிருத்யு என்றால் மரணம், ஜெய் என்றால் வெற்றி எனவே. இந்த கலவையை மரணத்தின் மீதான வெற்றியாக எடுத்துக் கொள்ளலாம்.

தங்கள் ஜாதகத்தில் கொடிய கிரக சேர்க்கையால் அகால மரணத்தைக் குறிக்கும் வகையில் பாதிக்கப்பட்டவர்கள். இந்த இடத்தில் மகா மிருத்யுஞ்சய் ஜபம் செய்து, பல பக்தர்கள் தங்கள் முயற்சிகளில் வெற்றி பெற்றுள்ளனர்.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

## வேப்பிலையை இனிக்கச் செய்யும் திருவாரூர் சக்திபுரம்

# சீதளாதேவி மாரியம்மன்





திருவாரூரில் உள்ள சக்திபுரம் எனும் ஊரில் சீதளாதேவி மாரியம்மன் கோயில் உள்ளது.

சீதளம் என்றால் குளிர்ச்சி என்று அர்த்தம் இங்கு வழிபடும் மக்களின் உடல் மற்றும் மன உஷ்ணத்தை போக்கும் தாய் ஆதலால் இவளுக்கு இந்த பெயர் அமைந்திருக்கிறது.

இந்த கோயிலில் எந்த அம்மன் கோயிலிலும் கேள்விபடாத அதிசயம் நடக்கிறது.



இந்த கோயில் வளாகத்தில் உள்ள பழமை வாய்ந்த வேப்பமரத்தின் இலை இனிக்கிறது.

இனிப்பு என்றால் ஏதோ சாதாரணமான இனிப்பு அல்ல தேன் போன்று இந்த இலை சாறு இனிப்பது அதிசயத்திலும் அதிசயமாக உள்ளது.

பல விதமான ஆராய்ச்சி களுக்கு உட்படுத்தி பார்த்த பிறகும் இதன் காரணம் புரியவில்லை மேலும் இந்த இலையை கோயில் வளாகத்திற்கு வெளியே எடுத்து வந்து சாப்பிட்டால் கசக்கிறது.

அம்பாளின் அருளாகவே இதை பக்தர்கள் கருதுகிறார்கள்.

இந்த கோயிலே பிரம்மாண்டமாக பரந்து விரிந்துள்ள அந்த வேப்ப மரத்தின் கீழ் தான் அமைந்துள்ளது.

### குழந்தை பாக்கியம் தரும் வேப்பமரம்

இங்கே ஸ்தல விருட்சமாக வேப்பமரம் உள்ளது. குழந்தை வரம் வேண்டி வருபவர்கள் இந்த மரத்தில் தொட்டில் கட்டி, வளையல்கள் சமர்ப்பித்து அம்மனிடம் பிரார்த்தனை செய்கின்றனர். தங்கள் பிரார்த்தனை கைக்கூட அன்னதானமிட்டும், அம்மனுக்குப் புடவை சாத்தியும் வேண்டுகின்றனர். இந்த வேண்டுதலுக்கு அம்மன் விரைவிலேயே நல்ல பலன் தருவாள் என்பது நம்பிக்கை. மணமாகாத கன்னியர்களும் இந்த வேப்பமரத்தைச் சுற்றினால் விரைவில் திருமணம் நிச்சயமாகும்.

இந்த தாயாரை வழிபட நினைத்தது நடக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

# சர்வமும் வசமாக்கும் முருகனின் மந்திரங்கள்




மூலமந்திரம் என்று நாம் கூறுவது ஓம் சரவண பவ இந்த மந்திரத்தை முறையாக கூறினால் இந்தப் பிறவி மட்டுமல்லாமல் நம்மு டைய ஏழேழு பிறவிகளுக்கும் அதைத் தாண்டி இறைவனின் திருவடியை அடைவதற்கும் உதவி புரியும் மந்திரம்

**சரவணபவ**

மந்திரத்தை உச்சரித்தால் சர்வமும் வசமாகும்.

**ரவணபவச**

மந்திரத்தை உச்சரித்தால் நம் வாழ்க்கைக்கு தேவையான அனைத்து பொருளும் நம்மை வந்து சேரும்.

**வணபவசர**

மந்திரத்தை உச்சரித்தால் நமக்கு தெரிந்த எதிரிகள் மற்றும் மறைமுகமாக நமக்கு இருக்கும் எதிரிகள் என்று அனைத்து வகையான எதிரிகளையும் நம்மால் வெல்ல முடியும்.

**ணபவசரவ**

மந்திரத்தை உச்சரித்தால் நமக்கு இருக்கக்கூடிய எப்பேற்பட்ட நோயாக இருந்தாலும் அந்த நோய்கள் அகன்று விடும்.

**பவசரவண**

மந்திரத்தை உச்சரித்தால் நாம் செய்யும் தொழிலில் நமக்கு சிறந்த ஞானத்தை முருகப்பெருமான் அருள்வார்.

**வசரவணப**

மந்திரத்தை உச்சரித்தால் நமக்கு முக்தி நிச்சயம் கிடைக்கும்.


ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# பத்மநாப சுவாமி கோவிலின் ஆதிமூல கோவிலான

# ஏரிக்கோயில்

திருவனந்தபுரத்தில் அமைந்திருக்கும் பத்மநாப சுவாமி கோயில் பற்றி அனைவரும் அறிந்திருப்போம். இந்தக் கோயிலுக்கு ஆதிமூல மாக அமைந்த கோயில் ஒன்று உள்ளது. அது கேரள மாநிலம், காசர்கோடு மாவட்டத்தின் அனந்தபுரா கிராமத்தில் உள்ள ஒரு ஏரியின் நடுவே அமைந்துள்ளது.

ஏரியின் நடுவே அமைந்திருப்பதாலேயே இதற்கு, 'ஏரிக்கோயில்' என்று பெயர். இந்த ஏரிக்கோயிலின் வலதுபக்க மூலையில் இருக் கும் ஒரு குகை வழியாக அனந்த பத்மநாப சுவாமி திருவனந்தபுரம் வரை தினமும் சென்று திரும்புவதாக ஐதீகம்.

இந்தக் கோயில் குறித்து புராணக் கதை ஒன்று கூறப்படுகிறது. திவாகர வில்வ மங்கலா எனும் முனிவர் அனந்தபுரா கிராமத்தில் மகாவி ஷ்ணுவை தினமும் வழிபட்டு வந்திருக்கிறார். ஒரு நாள் பகவான் சிறுவன் வடிவில் அவர் முன் தோன்றியிருக்கிறார்.

அந்த சிறுவனின் முகத்தில் இருந்த தெய்வீகக் களையினால் ஈர்க்கப்பட்ட முனிவர் அவனை யார் எனக் கேட்க, அவன் தன்னை யாருமற்ற அனாதை எனக் கூறியிருக்கிறான். இதனால் பரிதாபப்பட்ட முனிவர் அவனை தன்னோடு இருக்கச் சொல்ல, சிறுவன் அதற்கொரு நிபந் தனை விதித்தான்.

'எப்போதாவது நீங்கள் என் மீது கோபம் கொண்டால், உடனே நான் இங்கிருந்து சென்று விடுவேன்' எனக் கூற, முனிவரும் அதற்கு ஒப்புக்கொண்டார்.

சில நாட்கள் அந்த சிறுவன் முனிவருக்குத் தொண்டாற்றி வந்தான். நாளடைவில் அவன் தனது குறும்புகளை ஆரம்பித்திருக்கிறான். ஒரு நாள் அவனது சேட்டை எல்லை மீறிப் போக, முனிவர் அவன் மீது கோபித்துக்கொண்டார்.

சிறுவன் முன்பு கூறியதுபோல, தான் முனிவரிடமிருந்து விடைபெறுவதாகவும், இனி தன்னைப் பார்க்க விரும்பினால் அனந்தன்












e-magazine

aanmeegamalar.com

காட்டில் மட்டுமே பார்க்க முடியும் என்று சொல்லி விட்டு உடனே மறைந்து போனான். அப் போது தான், அந்த சிறுவன் வேறு யாருமல்ல, அந்தப் பரந்தாமன்தான் என உணர்ந்தார் முனிவர்.

சிறுவன் மறைந்த இடத்தில் ஒரு குகையை பார்க்கிறார் முனிவர். சிறுவனைத் தேடி அந்த குகை வழியே சென்றவர், ஒரு கடற்கரையை ஒட்டி வெளியேறி, கானகம் ஒன்றை அடைகிறார். அங்கு அவர் முன் தோன்றிய அந்த சிறுவன், கண நேரத்தில் ஒரு இலுப்பை மரமாக மாறி யிருக்கிறான்.

அடுத்த நொடி அந்த இலுப்பை மரம் சரிந்து ஆயிரம் தலை கொண்ட சர்ப்பத்தின் மேல் அமர்ந்திருக்கும் மகாவிஷ்ணு வடிவத்தை அடைந்திருக்கிறது. இந்த இடமே தற்போது திரு வனந்தபுரம் பத்மநாப சுவாமி ஆலயமாக மாறி உள்ளது என்கிறது புராணம்.

அனந்தபுரம் ஏரி நீர் சுவையான ஊற்று தண்ணீரால் சூழ்ந்திருக்கிறது. ஆங்காங்கே பாழடைந்து காணப்படும் சில இடங்கள் இந்தக் கோயிலின் பழைமையைக் கூறுகின்றன. ஸ்ரீகோயில் (கருவறை), நமஸ்கார மண்டபம், திட்டப்பள்ளி, ஜல துர்கா சன்னிதானம் மற்றும் குகையின் நுழைவாயில் ஆகியவை ஏரிக்குள் உள்ளன.

நமஸ்கார மண்டபம் கிழக்குப் பக்கப் பாறையோடு ஒரு சிறு பாலத்தால் இணைக்கப் பட்டிருக்கிறது. அதன் வழியாகவே கோயிலுக்குச் செல்ல வேண்டும். கருவறையின் இரு பக்கமும் மரத்தால் நுணுக்கமாகச் செதுக்கப்பட்ட துவாரபாலகர்களைக் காணலாம். அதேபோல, மண்டப விதானத்தில் மரத்தால் செதுக்கப்பட்ட தசாவதாரக் காட்சிகளையும் கண்டு தரிசிக்கலாம்.

ஆதியில் இந்தக் கோயிலின் அசல் சிலை கள் உலோகத்தினாலோ கல்லினாலோ செதுக்கப் படவில்லை. ‘கடு – சர்க்கரை யோகம்’ எனப்படும் 70 வித மருத்துவக் கலவைப் பொருட்களால் செய்யப்பட்டிருக்கின்றன. 1972ம் வருடம் இவை பஞ்சலோகச் சிலைகளாய் மாற்றி வைக்கப்பட்டிருக்கின்றன. இவை காஞ்சி மடத் திலிருந்து பரிசளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தற்போது மீண்டும், ‘கடு – சர்க்கரை யோகம்’ கொண்டு செய்யப்பட்ட சிலைகளைப் பிரதி ஷ்டை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. இந்தக் கோயிலில் மகாவிஷ்ணு, ஐந்து தலை கொண்ட அனந்த பகவான் மேல் அமர்ந்திருப்பது போன்ற மூலவர் சிலை வழிபடப்பட்டு வருகிறது!

# சாஸ்திரமும் புராணங்களும் கூறும் உண்மைகள்



செவ்வாய் கிழமை எவரிடமும் கடன் வாங்குவதும், பத்திரத்தில் கையாழுத்திடவும் கூடாது.

**– காலப் பிரகாசிகா**

முதல் திருமணம் செய்வதற்கு கார்த்திகை மாதம் கூடாது. மறுமணம் செய்வதற்கு கார்த்திகை மாதம் சிறந்தது.

**– விதான மாலை**

சந்திரன் ரோகினியில் சஞ்சாரம் செய்யும் காலத்தில், அந்த நட்சத்திர நாழிகையில் பாதியை நீக்கி, மீதியிருப்பதில் முதல் பாதியில் எந்த காரியம் செய்தாலும், தடை,தாமதம் இல்லாமல் வெற்றி கிடைக்கும்.

**– மணிக்கண்ட கேரளம்**

கனவில் சுடுகாட்டைக் கண்டால் விரைவில் திருமணம் உண்டாகும்.

**– கனவு பலன்கள்**

பெண்கள் ஓம் என்பதை கூறக் கூடாது, ஹ்ரீம் என்று கூற வேண்டும்.

**– பூஜா கல்ப பஞ்சகம்**

வீட்டின் இடது புறத்தில் இருக்கும் மரங்களை விட, வலதுபுறத்தில் இருக்கும் மரங்கள் உயர்வாக இருக்க வேண்டும்.

**– வாஸ்து சாஸ்திரம்.**

ஜீவன் தந்தையிடமிருந்து விந்து வடிவாய் தாயிடம் செல்வது முதல் பிறப்பு.தாயிடமிருந்து இந்த பூமியில் பிறப்பது இரண்டாவது பிறப்பு. பூமியிலிருந்து வின்னுலகம் செல்வது மூன்றாவது பிறப்பு.
ஆக மரணமும் ஒரு பிறப்பே!

**– ஐதரேயோப நிஷத்து**

இரவில் பால் சாதம் ஆயுள் விருத்தி, இரவில் தயிர் சாதம் ஆயுள் குறையும்.

**– சிவமகா புராண சாஸ்திரம்**

அரளி பூக்களில் மஞ்சள் நிறம் அல்லது பொன் நிறப்பூக்கள் கொண்டு தெய்வத்திற்கு அர்ச்சனை செய்ய முதிர் கன்னி திருமணமும், கடன்களும் தீரும்

**– மஹாபாரதம்**

e-magazine
aanmeegamalar.com

# விளக்கின் பெயரில்

## சிவனும் பெருமாளும் காட்சிதரும் இரண்டு திருத்தலம்





பிரம்மன் காஞ்சிபுரத்தில் யாகம் செய்தபோது, சரஸ்வதியை விட்டுவிட்டு, அவரது மற்ற இரு மனைவிகளான சாவித்திரி மற்றும் காயத்ரியுடன் யாகம் செய்யத் தொடங்கினார். இதனால் கோபமடைந்த சரஸ்வதி, வேகவதி என்ற நதியாக மாறி, யாகத்தை அழிக்க வந்தபோது, பிரம்மனின் யாகத்தை காப்பதற்காக சிவபெருமானின் ஆணைப்படி திருமால் சென்று அதனைத் தடுக்க முற்பட்டார்.

வேகவதி நதி நள்ளிரவில் காஞ்சி நகரை அடைய, திருமால் அவ்விருளில் நதியின் வருகையைக் காண்பதற்காக ஒளியாய் நின்று, “ஆதீபிதேசம்’’ என்ற நாமத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வரம்பெற்று, வேகவதி நதியாக வந்த சரசுவதியைத் தடுத்து நிறுத்தி பிரமனின் வேள்வியைக் காத்தருளினார்.

இவ்வாறு காஞ்சிபுரம் ஆதீபிதேசர் கோயில் (ஆதீபிதேசம்) என்று அறியப்படும் இத்திருக் கோவில், காஞ்சிபுரத்திலுள்ள சிவன் கோ யில்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படு கிறது. மேலும் மூலவர் பெரிய ஆவுடையாரின் பெரிய சிவலிங்க மூர்த்தியாக கம்பீரமாக காட்சித் தரும் இக்கோயில் பற்றிய குறிப்புகள், காஞ்சிப் புராணத்தில் தனிப்படலமாக கூறப்பட்டுள்ளது.



நள்ளிரவில் சிவலிங்கத்தை நிறுவிப் போற்றி வழிபட்டதால் இத்தலத்திற்கு எதிரிலேயே பெரு மாளுக்கு விளக்கொளிப் பெருமாள் என்னும் திருப்பெயரை சிவபெருமான் வழங்கியதாக கூறப்படுகிறது. விளக்கொளிப் பெருமாள் வழிபட்ட விளக்கொளியீசரைப் போற்றினோர் வேண்டிய வரங்களைப் பெற்று முத்தியையும் பெறுவரென்பது இத்தல விளக்கமாக உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தின் தலைநகரான காஞ் சிபுரத்தின் தென்பகுதியில் ஆலடிபிள்ளையார் கோயில் தெருவில் கீரைமண்டபம் அருகில் இக்கோயில் அமைந்துள்ளது.

e-magazine
aanmeegamalar.com

# ஆணவம் மிகுந்த பிள்ளையால் அவமானப்பட்ட தாய்

# விபீஷணனின் தாயை தேற்றிய இராமன்

e-magazine
aanmeegamalar.com

இராமரை விருந்தினராக இலங்கைக்குள் அழைக்க வேண்டும் என்று இலங்கைக்கு அரசனான பின் விபீஷணன் விரும்பினார். அப்போது அவருக்கு ஒரு சந்தேகமும் அவனுக்குள் எழுந்தது. தன்னையும் மனைவியையும் பிரித்த இராவணனின் நாட்டுக்குள் நுழைய இராமர் சம்மதிப்பாரா? என்ற சந்தேகம் எழுந்தது. இருந்தாலும் தன்னை மன்னனாக ஆக்கிய ஆற்றல் மிக்க தலைவனுக்கு மரியாதை செய்ய வேண்டும் என முடிவெடுத்தார். தயக்கத்துடன் தனது விருப்பத்தை இராமரிடம் தெரிவித்தார். எனக்கும் உன் நாட்டைப் பார்க்க விருப்பம் தான் விபீஷணா என்று இராமர் உடனே வர சம்மதித்தார்.

அனுமன் அங்கதன் இலட்சுமணன் ஆகியோர் உன் நாட்டின் வனப்பையும் எழிலை யும் வர்ணித்த போது எனக்கும் பார்க்கவேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது என்றார் ராமன். விபீஷணன் நெகிழ்ந்து இராமனுக்கு வழிகாட்டிய படி முன்னே சென்றார். இராமருடன் மற்றவர்களும் பின்தொடர்ந்தார்கள்.

இராமர் இலங்கையின் அவல நிலை கண்டு தன்னால்தானே இப்படி நேர்ந்தது என வருத்தத் துடன் நடந்து சென்றார். பிரமாண்டமான மாளி கைகள் பொலிவு குறைந்து காணப்பட்டன. ஆள் அரவம் இல்லாத அரண்மனைகள் வருத்தப் பட வைத்தன. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் சிலர் தம்மை கண்டதும் வணங்குவதை கவனித்த ராமர் சற்றுத் தொலைவில் யாரோ ஒரு பெண் ஓடி ஒளிவதையும் கண்டார். தன்னைக் கண்ட தும் ஒருவர் மறைய முயற்சிப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

இதனை கவனித்த விபீஷணன் இராமரிடம் இப்போது ஓடியது எங்கள் தாயார் என்றான். இதனைக் கேட்ட இராமர் அவர்கள் ஏன்



பயந்தோட வேண்டும்? நான் அந்த அளவுக்கு இந்தப் போரில் உயிர்ச்சேதம் புரிந்து விட்டேனா? என்று குரல் தழுதழுத்தவாறு கூறினார்.

இதற்குள் விபீஷணனைச் சேர்ந்த சிலர் அவரது தாயாரை அழைத்து வந்து ராமன் முன் நிறுத்தினார்கள். அம்மா மன்னியுங்கள். போர் தர்மப்படி பெண்கள் குழந்தைகள் முதியவர்கள் உடல்குறை உள்ளவர்களை நான் துன்புறுத்த மாட்டேன்.

நிராயுதபாணியாக நின்ற இராவணனைத் தாக்குவதும் தர்மம் அல்ல என்று உணர்ந்து நாளை போரிட வருமாறு வாய்ப்பு கொடுத்தேன். அப்படிப்பட்ட நான் உங்களுக்குத் துன்பம் தரமாட்டேன் என்னை நம்புங்கள் என்றான் ராமர்.

இராமா உனக்கு அளவு கடந்த துன்பத்தைக்

ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்



கொடுத்த இராவணனின் தாயார் என்ற குற்ற உணர்வால்தான் சந்திக்க முடியாமல் மறைந்து கொள்ள முயற்சித்தேன் என்பது ஒரு காரணம். உன் வீர தீரம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். பெண்ணாகப் பிறந்ததாலும் அரண்மனையிலிருந்து வெளியே வரமுடியாத பாரம்பரியம் கட்டுப்பாட்டாலும் உன் மகிமையை நேரில் காணும் பாக்கியம் கிடைக்கவில்லை. ஆனாலும் உன் வீரச்செயல்கள் என் காதுகளை எட்டத்தான் செய்தன. அதே சமயம் என் மகன் இராவணன் உனக்கு துன்பம் இழைத்ததையும் நன்கறிவேன்.

ஆணவம் மிகுந்த அவனைப் பெற்றதற்காக அவமானப்படுகிறேன். இது ஒரு புறம் இருந்தாலும் நான் உன்னுடைய அடுத்தடுத்த வீர தீர பராக்கிரமங்களை நேரில் பார்க்க முடியா விட்டாலும் கேட்டாவது இன்புற வேண்டும் என் பதற்காக நான் நீடித்து வாழ விரும்பினேன். உன் போர் தர்மத்தைப் புரிந்து கொள்ளாத உன் படையினர் யாராவது என்னைக் கொன்றுவிடக்கூடாது அல்லவா? அதனால் ஓடி ஒளிந்தேன் என்றார்.

இவரது பதில் அனைவருக்கும் திகைப்பைத் தந்தது. இராமர் அவளுடைய கைகளை எடுத்துக் கண்களில் ஒற்றி விட்டு அம்மா விதி நிர்ணயித்த காலம்வரை நீங்கள் நிம்மதியாக வாழலாம். கவலை வேண்டாம் என ஆறுதல் கூறினார். விபீஷணா நீ ராவணனுக்கு அறிவுரை சொன்னபோது கேட்காத இராவணன் ஒருவேளை தாயார் சொல்லியிருந்தால் கேட்டிருக்கலாம். இவரை இனி நீதான் மிகுந்த பரிவு அக்கறையுடன் பாதுகாத்து வர வேண்டும் தாய்மையைப் போற்ற வேண்டும் என்றார் இராமர்.

இராமர் காலில் விழுந்த விபீஷணன் மாற்றாந்தாய் சொன்னார் என்பதற்காக காட்டுக்குப் புறப்பட்ட பண்பாளன் நீங்கள். தாய்க்கு உரிய மரியாதையையும் மதிப்பையும் அளிக்கத் தயங்காத அற்புத மகன் நீங்கள். உன்னுடன் இணைந்திருக்கும் நான் அந்த நற்பண்பை இழக்க மாட்டேன். இராவணனை எங்கள் தாயார் திருத்தவில்லையே என நான் இதுவரை ஆதங்கப்பட்டதில்லை. ஏனெனில் எனக்கு இராவணனின் முரட்டு குணம் தெரியும். என் தாயின் அன்புள்ளமும் தெரியும். அதனால் இராமா நீங்கள் எமது தாயாரைப் பற்றிய கவலை வேண்டாம். நான் அவரை கண்ணின் இமைபோலக் காப்பேன் என்றார். இராமரும் அவரைத் தட்டிக் கொடுத்து பாராட்டினார்.

## நகர்கோவிலில் வீற்றிருக்கும்

# நாகராஜர் கோவில்

## வரலாறும் சிறப்புகளும்

கன்னியாகுமரி மாவட்டத்தில் பகவதி அம்மன் கோயிலுக்கு அடுத்து, புகழ்பெற்றக் கோலாக, நாகர்கோவில் புறநகர்ப் பகுதியில் அமைந்திருக்கும் நாகராஜா கோயில் இருக்கிறது. கேரளக் கட்டுமானக் கலையில் அமைந்திருக்கும் இந்தக் கோயிலின் கருவறையில் ஐந்துதலை நாகராஜர் இருந்து அருள் புரிகிறார்.

முந்தையக் காலத்தில் இங்கிருந்த நெல் வயல்களில் நெல்லறுத்துக் கொண்டிருந்த பெண், ஒரு நெற்கதிரை அறுக்கும் போது, அதிலி ருந்து இரத்தம் வந்திருக்கிறது. அதனைக் கண்ட அந்தப்பெண் அச்சத்துடன் அங்கிருந்தவர்களை அழைத்திருக்கிறார். அவர்கள் அவ்விடத்திற்கு வந்து பார்த்த போது, அங்கேப் பாறையின் மேல் ஐந்து தலை நாகராஜர் சிலை இருந்திருக்கிறது.

அந்தச் சிலையின் மேற்பகுதியிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்திருக்கிறது. அதனைத் தொடர்ந்து, அந்தச் சிலைக்குப் பாலாபிசேகம் செய்திருக்கின்றனர். அதன் பின்பு, அச்சிலையிலிருந்து வடிந்த இரத்தம் நின்று போயிருக்கிறது. அதன்பிறகு, அந்த இடத்தில் ஓலைக் குடிசை வேய்ந்து நாகராஜரை வழிபட்டு வந்திருக்கின்றனர்.

இந்நிலையில், சரும நோயால் பாதிக்கப்பட்ட களக்காடு பகுதியை ஆண்ட மார்த்தாண்ட வர்மா, அந்த நாகராஜா கோயிலுக்கு வந்து பாலாபிசேகம் செய்து வழிபட நோய் நீங்கியிருக்கிறது.

அதனைத் தொடர்ந்து, அவர்








அவ்விடத்தில் கோயிலைக் கட்டுவித்திருக்கிறார். கருவறைப் பகுதி நாகங்கள் வசிப்பதற்கேற்றதாக ஓலைக் கூரையாகவே அமைக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதத்தில் அக்கோ யிலின் அர்ச்ச கர்களே, அந்த ஓலைக் கூரை யினைப் பிரித்துப் புதிய கூரையினை வேய்ந்து வருகின்றனர் என்று இந்தக் கோயிலின் தல வரலாற்றைச் சொல் கின்றனர்.

இக்கோயிலின் கருவறை அமைந்திருக்கும் பகுதி மணல் திட்டாகவே இருக்கிறது. இவ்விடம் வயல் இருந்த இடம் என்பதால் இங்கு நீர் ஊறிக் கொண்டிருக்கிறது. இந்த நீருடன் சேர்ந்த மணலே பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த மணல் ஆடி மாதம் தொடங்கி மார்கழி மாதம் வரையில் கருப்பு நிறத்திலும், தை மாதம் முதல் ஆனி மாதம் வரையில் வெள்ளை நிறத்திலும் இருக்கும் என்பது இக்கோயிலின் சிறப்பாகச் சொல்லப்படுகிறது.

நாகராஜர் கோயில் கிழக்குப் பார்த்த நிலையில் இருந்தாலும், இக்கோயிலுக்கான முக்கிய நுழைவாயில் தெற்கு நோக்கியேஉள்ளது. இந்த வாசலை மகாமேரு மாளிகை என்று அழைக் கின்றனர். தெற்கு நோக்கிய இவ்வாசல் மேற்பகுதி யில் மூன்று கும்பங்களைக் கொண்டிருக்கிறது.

இவ்வாயிலின் கதவுகள் மரத்தால் செய்யப் பட்டவையாக இருக்கின்றன. இவ்வாயில்அரண் மனை முகப்பு போன்ற தோற்றத்தைக் கொண்



டிருக்கிறது. இதன் மேற்கூரை ஓடுகளால் வேயப் பட்டிருக்கிறது. இவ்வாயிலின் இரு பக்கமும் அறைகள் காணப்படுகின்றன. மேற்குப் புறமுள்ள அறை மாளிகை போன்ற அமைப்புடையது. இது தேக்கினால் ஆன மலபார் கட்டிடக்கலை அமைப் பைக் கொண்டிருக்கிறது.

18ஆம் நூற்றாண்டில் வேணாட்டு அரசர் அனுஷம் திருநாள் மார்த்தாண்ட வர்மாபட்டத்திற்கு வருவதற்கு முன்பு பப்புத்தம்பி உள்ளிட்ட அரசரின் பகைவர்கள் அவரைக் கொல்ல முயற்சித்தனர்.

1733 ஆம் ஆண்டில் மகாமேரு மாளிகையில், தெற்கு வாயிலின் மேற்குப்புறம் இருக்கும் அறையில் இளவரசர் மார்த்தாண்ட வர்மா உறங்கிக் கொண்டிருந்த நேரத்தில், அவரது எதிரியான பப்புத்தம்பி மாடிக்கு ஏறிச் சென்று அரசரை வாளால் வெட்ட முயன்றிருக்கிறார். அப்போது, கோயில் நந்தவனத்தில் உள்ள பாம்பு ஒன்று அந்த நேரத்தில் அங்கு வந்ததால், வாள் குறி தவறி உத்திரத்தில் பட்டிருக்கிறது.

அதனால் ஏற்பட்ட சப்தத்தைக் கேட்டு விழித்த மார்த்தாண்ட வர்மா தன்னைக் கொல்ல வந்த எதிரியை மடக்கிப் பிடித்துக் கொன்றார். இந்த வாயிலில் கொலை நடந்ததால், மன்னர் பரம்பரை யினர் இந்த வாயில் வழியாக கோயிலுக்குச் செல்வதில்லை எனச் சொல்கின்றனர்.

ஆவணி மாதத்தில் இக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் பால், உப்பு, மிளகு, மரப்பொம்மைகளைக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர். ஆவணி மாத ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையிலான இராகு காலத்தில் கோயிலின் முன்பகுதியில் அரச மரங்களின் கீழ் அமைக்கப்பெற்றுள்ள நாகர் சிலைகளுக்கு பக்தர்கள் தங்கள் கைகளாலேயே மஞ்சள், பால் அபிசேகம் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

e-magazine
aanmeegamalar.com


ஆன்மிகமலர்
மெயில் புக்
இதுவரை வெளிவந்த
அனைத்து இதழ்களையும்
எந்தவித கட்டணமின்றி
முற்றிலும் இலவசமாக
படித்து பயன்பெற
aanmeegamalar.com
இணையதளத்தை
பார்க்கவும்

# இதிகாசம் புராணங்கள் கேட்ட பலன் தரும் ஸ்தலம்

## பெரியவா கூறிய ரகசியம்

ஒரு பக்தருக்கு விந்தையான குறைபாடுகள்!. காது கேட்காது, புத்தகம் படிக்கும்படியான பார்வையில்லை. எதிரில் வரும் மனிதர்கள் நிழலுருவங்களாகத் தெரிவார்கள்.

வயதான காலத்தில், அவருக்கு ஒரு தீவிர மான ஆசை ஏற்பட்டது. இராமாயணம், ஸ்ரீமத் பாகவதம் பகவத்கீதை, புராணங்கள் படித்துக் கரையேற வேண்டும், என்று ஒரு வெறியே வந்துவிட்டது. ஆனால், புத்தகத்தைப் படிக்க முடியவில்லையே?

பெரியவாளிடம், விண்ணப்பித்துக் கொண்டார் பக்தர்.

அந்தச் சமயத்தில், சில பண்டிதர்களும் அங்கே இருந்தார்கள். பெரியவா அவர்களைப் பார்த்து, "இவரோபுராணங்கள் படிக்கணும்னு ரொம்ப ஆசைப்படறார். கண்பார்வை சரியில்லே. என்ன பண்ணலாம்?" என்று கேட்டார்கள். ஏற்றுக் கொள்ளும்படியான பதிலை யாராலும் சொல்ல முடியவில்லை.

பெரியவா: "நைமிசாரண்யம்னு ஒரு க்ஷேத்திரம் இருக்கு தெரியுமா?".

பக்தர்: "தெரியும்."

பெரியவா: "அங்கே என்ன விசேஷம்?"

பக்தர்: "அந்த இடத்திலேதான், ரிஷிகள் எல்லாரும், புராணங்களைக் கேட்டார்கள்.

பெரியவா: "புராணங்கள் எழுதியது யாரு?"

பக்தர்: "வ்யாஸர்"

"அவர், புராணங்களை எழுதின இடம்னு ஒரு ஸ்தலம் இருக்கு. 'வ்யாஸகத்தி'ன்னு பேர் சொல்லுவா.."

பண்டிதர்கள், ஆச்சர்யத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நைமிசாரண்யம் போய் வந்தவர்களுக்குக் கூடஅந்த இடம் பற்றி ஞாபகமில்லை. இந்த மாதிரி சின்ன சின்ன ஆனால், ரொம்ப முக்கியமான சேதியெல்லாம் பெரியவாளுக்கு, எப்படி நினைவிருக்கிறது.?"

பெரியவாள், பக்தரை அருகில் அழைத்தார்கள்.

"குடும்பத்தோட நைமிசாரண்யம் போய், கொஞ்ச நாள் தங்கு. வியாஸர் புராணங்கள் எழுதின இடத்திலே, விழுந்து, விழுந்து நமஸ்காரம் பண்ணு. அப்புறம் உனக்கே எல்லாப் புராணங்களும் மனசிலே ஸ்புரிக்கும்"

இந்த மாதிரியெல்லாம் அனுபவ சாத்தியமான வழிகளைச் சொல்ல, பெரியவாளால் மட்டுமே முடியும்.

குறிப்பு: நைமிசாரண்யம் ஸ்தலம் பற்றி விரிவான கட்டுரை 42ம் பக்கத்தில் உள்ளது.



## மனித இனத்தை சின்னாபின்னமாக்கும் கலிபுருஷனுக்கு எட்டு இடங்களில் தங்குவதற்கு அனுமதி கொடுத்த

# பரீட்சத்து அரசன்




பரீட்சித்து அரசன் மத்சய நாட்டு இளவரசி உத்தரைக்கும் அபிமன்யுவிற்கும் பிறந்தவன். குருச்ஷேத்திரப் போரில் கௌரவர்களால் அபிமன்யு கொடூரமாக கொலையுண்ட போது பரிட்சித்து உத்திரையின் கர்ப்பத்தில் இருந்தவன். குருச்சேத்திரப் போர் முடிந்த நாளில் அசுவத்தாமன் பிரம்மாஸ்வரத்தை ஏவி உத்தரையின் கருவிலுள்ள குழந்தையையும் கொல்ல முற்படும்போது கிருஷ்ணர் பரீட்சித்தை காப்பாற்றுகிறார்.

கிருஷ்ணரும் பாண்டவர்களும் கலியுகம் ஆரம்பிக்க போகிறது ஆகவே உலகைவிட்டு செல்ல முடிவெடுத்து பரீட்சித்துவை அரசனாக்கிவிட்டு செல்கின்றனர். குரு நாட்டின் அரசாட்சியை ஏற்கும் பரீட்சித்து கிருபரின் வழிகாட்டுதலில் நல்லாட்சி புரிகிறான்.

கிருஷ்ணர் மறைந்தவுடன் நிலவுலகில் அதர்மத்தை நிலைநாட்ட கலிபுருசன் அடி எடுத்து வைத்துவிட்டான். உடனே தனது வாளை எடுத்து நான் இருக்கும் வரையில் தர்மம் அடிபடுவதை அனுமதிக்கமாட்டேன் என்று கூறி கலிபுருசனை வெட்ட தயாராகிறான் பரீட்சித்து. கலிபுருஷன் அஞ்சுகிறான். பாண்டவர் வம்சத்தில் வந்தவன் இந்த பரீட்சித்து அவனை வெற்றி பெற

ஆன்மிகமலர்.காம்



இயலாது. கலிபுருஷன் பரீட்சித்து மகாராஜாவிடம் சரணடைகிறான். சரணடைந்தவனைக் காப்பது முறை. எனவே கொல்லாமல் விடுகிறான் பரீட் சித்து.

இந்த நிலவுலகில் ஏதாவது ஓர் இடத்தைக் காண்பியுங்கள் நான் அங்கே போய் பிழைத் துக் கொள்கிறேன் என்று கலிபுருஷன் பரீட்சித்து விடம் கெஞ்சுகிறான். பரீட்சித்து மகராஜா கலி புருசனுக்கு நான்கு இடங்களை ஒதுக்கீடு செய்து கொடுக்கிறார்.

**சூதாட்டம் ஆடும் இடம்**
**மது அருந்தும் இடம்**
**பெண்களை அவமரியாதை செய்யும் இடம்**
**பிராணிகளை வதை செய்யும் இடம்,**

இந்த நான்கு இடங்களை கலிக்கு கொடுத்தார் பரீட்சித்து அரசன்.

ஆனால் கலிபுருஷனுக்கு மனம் திருப்தி அடையவில்லை. இந்த இடம் போதவில்லை என்று கூறி மேலும் சில இடங்கள் கேட்கிறான்.

பரீட்சித்து மகராஜா மேலும் நான்கு இடங்களை கொடுக்கிறார்.

**தங்கம் இருக்கும் இடம்**
**பொய் பேசப்படும் இடம்**
**ஆணவம் செருக்கு இருக்கும் இடம்**
**காமம் கோபம் இருக்கும் இடம்**

கலிபுருஷனுக்கு மனம் திருப்தி அடைய வில்லை. இந்த இடம் போதவில்லை என்று கூறி மேலும் சில இடங்கள் கேட்கிறான். பரீட் சித்து மகராஜா மேலும் இரண்டு இடங்களை கொடுக் கிறார்.

**பேராசை இருக்கும் இடம்**
**பகைமை இருக்கும் இடம்**

திருப்தி அடைந்த கலி நான் இருக்கும் இந்த 10 இடங்களில் உங்களுடைய மக்கள் யாரும் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள். ஆனால் இந்த 10 இடங்களை நாடி வரும் மக்களை என் பிடியில் நான் எடுத்துக் கொள்வேன்

அப்படி மேற்கண்ட 10 இடங்களுக்கு வராத மக்கள் யாரையும் நான் ஒன்றும் செய்யமாட்டேன் என்று உத்திரவாதம் கொடுத்து உலகத்தில் கலியுகத்தை ஆரம்பிக்கின்றார் கலிபுருசன்.



e-magazine
aanmeegamalar.com

# ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்** மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த **185** க்கும் மேற்பட்ட இதழ்களை



**aanmeegamalar.com**

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.

# தீய சக்திகளை விரட்டும் ஸ்ரீ சாமுண்டீஸ்வரி





சக்தி என்றாலே சகல உயிர்களுக்கும் பலம் உண்டாகும். கூடவே பயமும் உண்டாகும். அதில் தன்னை நாடி வந்து வணங்குவோரது வாழ்வில் பயத்தை நீக்கி, பலத்தை கொடுக்கும் சக்தியாகத் திகழ்கின்றாள் படைவீட்டில் அருள்புரியும் மாயா சக்தியான ஸ்ரீ சாமுண்டீஸ்வரி.

தமிழகத்தின் சிறப்புவாய்ந்த சக்தி தலங்களுல் ஒன்றான படைவீடு என்னும் படவேடு, ஜவ்வாது மலைத் தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. பாலாற்றுக்கு தெற்கிலும், சேயாற்றுக்கு வடக்கிலும், மலைகளும், குளிர்ச்சியான காடுகளும் சூழ்ந்த இப்படைவீடு கமண்டல நதிக்கரையில் சிறப்பு பெற்று விளங்குகிறன்து.

ஆதியில் இந்த தலம் படைவீடு, மாதுபுரி,குண்டலிபுரம், குண்டலிநகரம் போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. சித்தர்களின் பூமியாக திகழும் இந்த திருத்தலத்தில் 1008 சிவாலயங்களும், 108 விஷ்ணு ஆலயங்களும் இருந்தனவாம்.

நந்திவர்மப் பல்லவனின் ஆட்சி இப்படைவீட்டில் நடைபெற்றுள்ளது. சம்புவராய மன்னர்கள்

படைவீட்டை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களது காலத்தில் ஸ்ரீ வரதராஜ பெருமாள், லட்சுமி நரசிம்மர், வேணுகோபால சுவாமி ஆகிய திருக்கோவில்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அதோடு, சிறிய கோட்டை, பெரிய கோட்டை என இரு கோட்டைகளும் கட்டப்பட்டுள்ளன. விஜயநகர மன்னர்கள் மற்றும் நாயக்கர் கால கல்வெட்டுகள் இங்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆதியில் பஞ்சமுக ஆஞ்சநேயர் உருவானது இத்தலத்தினில்தான். எனவே இங்கு ஆஞ்சநேயர் எட்டு திக்கிலும் காவல் புரிகின்றார். இந்து கடவுள்களின் திருக்கோயில்கள் நிரம்பப்பெற்ற திருத்தலமிது. இங்கே குடிகொண்டருளும் அன்னை ஸ்ரீ ரேணுகா தேவியின் திருக்கோவிலுக்கு அருகே கோயில் கொண்டு, தீய சக்திகளை விரட்டி, நல்வரங்களை அருளிக் கொண்டிருக்கின்றாள் ஸ்ரீ ஜெய விஜய சாமுண்டீஸ்வரி.

விதர்பதேச மன்னனான இரைவதனுக்கு மகளாகப் பிறக்கின்றாள் ஸ்ரீ ரேணுகாதேவி. தக்கப் பருவமடைந்தாள். "எனது மனதுக்குப் பிடித்தவரும், என்னை போரில் வெல்பவரையுமே நான் திருமணம் செய்வேன்" எனக் கூறிய ரேணுகா.....திக்விஜயம் செய்து, பல அரசர்களை மண்டியிடச் செய்தாள். பின்னொரு நாளில் ஜவ்வாதுமலைத் தொடரின் கீழுள்ள குண்டலிபுரத்தை அடைந்து, ஜமதக்கினி முனிவரது ஆசிரமத்தை நெருங்கினாள்.

தனது சேனைகளை சந்துதுவாரம் என்னும் சந்தவாசலில் நிறுத்தினாள். ஜமதக்கினி தனது சீடர்களை அனுப்பி, ரேணுகையை இழுத்து வரும்படி கட்டளையிட்டார். அவரது பிரதான சீடனான அகிர்தவிருணன் தனது மந்திர தண்டத்தால் பல வீரர்களை வரவழைத்து ரேணுகையுடன் போரிட்டான். அப்போது தனது மாயா ரூபியும், உற்ற தோழியுமாக விளங்கும் சாமுண்டிதேவியிடம்.... எதிர்க்கும் சேனைகளை தவிடு பொடியாக்க கட்டளையிட்டாள்.

ஸ்ரீ ரேணுகையின் கட்டளையை ஏற்ற சாமுண்டீஸ்வரி ஜமதக்கினியின் சேனைப் படைகள் மீது அன்புமாரி பொழிந்தாள். பலரை தனது நெற்றிக்கண் தீயினால் பஸ்மமாக்கினாள். சாமுண்டி தேவி ஏற்படுத்திய தீயை தனது கமண்டல நீரினால் தனித்தார் ஜமதக்கினி முனிவர். பின்னர் குருவின் கட்டளைப்படி அகிர்தவிருணன்....லட்சம் செங்குவளை மலர்களால் சாமுண்டிதேவியை சுற்றி வளைத்து கமண்டலநிதியின் கரையில் நிலை நிறுத்தினான். அன்று முதல் இங்கு ஸ்ரீ ரேணுகையின்



மாயா சக்தியாக, துர்கையின் அம்சமாக ஸ்ரீ சாமுண்டீஸ்வரி அம்பிகை அருளாட்சி புரிந்து வருகின்றாள்.

பின், ரேணுகை தனது படைகளை இவ்விடத்தில் நிறுத்திவிட்டு, தனது இன்னொரு தோழியான சகியுடன் ஆனி மாதம் மக நட்சத்திரத்தன்று வனத்திற்குள் நுழைந்தாள். ரேணுகாதேவியின் படைகள் நிறுத்தப்பட்ட இடமே சேனாஹதம் என்றும், படைவீடு என்றும் ஆனது. பின்னர் ரேணுகை ஜாமதக்னியை மணந்து நான்கு பிள்ளைகளை பெற்றெடுக்கின்றாள். கந்தர்வனால் மனசஞ்சலம் கொண்டதால், மகன் பரசுராமரால் தலை வெட்டப்பட்டு பின் மாறிய தலையினால் மாரியம்மனாக இன்றுவரை பக்தர்களுக்கு அருள்மாரி புரிந்து வருகின்றாள். வவஸ்வான் என்னும் அயோத்திய அரசன் ஓர் அசுரனால்

e-magazine
aanmeegamalar.com








e-magazine
aanmeegamalar.com

தாக்கப்பட்டு, வசிஷ்டரிடம் இத்தல மகிமைகளை கேட்டறிந்து, இந்த குண்டலிபுரம் அடைந்து, அன்னை ஸ்ரீ ரேணுகையையும், ஸ்ரீ சாமுண்டி தேவியையும் பூஜித்து, வழிபட்டு, அசுரனை வென்று ஆட்சியைப் பிடித்தான். அசுரனை வென்ற பின் அன்னை ஸ்ரீ ரேணுகைக்கும், ஸ்ரீ சாமுண்டீஸ்வரி அம்மனுக்கும் ஆலயம் எழுப்பினான். பின் இந்த குண்டலி நகரத்தில் அரசாட்சி நடத்தி பலகாலம் வாழ்ந்தான். இறுதியில் ஈசனடி சேர்ந்தான்..

சிறியதொரு ஆலயமாக திகழ்ந்தாலும், அன்னையின் பேரருள் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

ஆன்மிகமலர்

ஒரே திருசுற்றுடன், ஏகதள விமானத்தோடு கூடிய அன்னையின் சன்னதி அற்புதமாக திகழ்கின்றது. முதலில் அத்திமரத்திலான அன்னை ஸ்ரீ ரேணுகையின் சிற்பம் காணப்படுகிறது. கருவறையில் வடக்கு முகமாக சங்கு சக்கரம் ஏந்தி 18 கரங்களுடன் சிம்ம வாகனத்தில், அமர்ந்த கோலத்தில் சாந்த வடிவினளாய் அருள்பாளிக்கின்றாள் ஸ்ரீ ஜெய விஜய சாமுண்டீஸ்வரி.

உயிர்பலி ஏற்காத தெய்வமாக நவ துர்க்கையின் வடிவாக விளங்குகின்றாள் இவ்வன்னை. நல்லவர்களுக்கு சாந்த ரூபியாகவும், தீயவர்களுக்கு துஷ்ட நிவர்த்தினியாகவும் காட்சியளிக்கின்றாள் ஸ்ரீ சாமுண்டீஸ்வரி. படைவீட்டு நாயகியாம் அன்னை ஸ்ரீ ரேணுகா தேவிக்கு என்னென்ன பூஜைகள் நடக்கின்றதோ, அதுபோலவே இங்கு சாமுண்டீஸ்வரிக்கும் நடைபெறுகின்றது.

பிரதி செவ்வாய் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இங்கு அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக அலங்காரங்கள் நடைபெறுகின்றன. அதோடு, அருள்வாக்கும் சொல்லப்படுகின்றது. ஆடி மாதம் 7 வெள்ளிகளும் இங்கு விசேட பூஜைகளும் சிறப்புடன் நடைபெறுகின்றன. நவராத்திரி ஒன்பது நாட்கள் சிறப்பு அலங்காரத்தில் அம்பாள் காட்சி அருள்கின்றாள்.

அம்பாள் பிறந்த தினமான ஆடி மூன்றாம் வெள்ளி அன்று சிறப்பு அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெறுகின்றன. ஆனி மாத பௌர்ணமியில் 1008 பால்குட விழாவும், 1008 பூங்கரகத் திருவிழாவும், நவராத்திரியில் திருவிளக்கு பூஜையும், விஜயதசமயில் சிறப்பு அபிஷேக அலங்காரங்களும் நடைபெறுகின்றன.

இவ்வன்னையை வணங்கினால்....மூதாதையர்களல் உண்டான பெண் சாபம் நீங்கும். கால சர்ப்ப தோஷம், ராகு கேது தோஷம், பித்ரு தோஷம் ஆகியன நீங்கும். பில்லி சூனியம் ஏவல் போன்ற தீய சக்திகளை விரட்டி, பலர் வாழ்வில் நிம்மதி அளிக்கின்றாள்.

பிரார்த்தனை நிறைவேறியபின் வரும் பக்தர்கள் அம்பாளுக்கு புது புடவை சாற்றி, அன்னதானம் செய்கின்றனர்.

கடன் பிரச்சனை, குடும்ப ஒற்றுமை, கைவிடப்பட்ட நோய்கள் ஆகிய வற்றுக்குத் தீர்வாக 108 எலுமிச்சம்பழமாலை சாற்றி வேண்டிக் கொள்கிறனர் பக்தர்கள்.

இப்படைவீட்டில் ஸ்ரீ ரேணுகாதேவியை தரிசிக்கும் பக்தர்கள், ரேணுகியின் தோழியான, ரேணுகாவின் மறுவடிவமான ஸ்ரீ சாமுண்டீஸ்வரி தேவியும் வழிபட வேண்டும் என்பது ஐதீகமாகும்.



மோ.கணேஷ்

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் திருவண்ணாமலை வேலூர் பேருந்து சாலையில் உள்ள சந்தவாசலில் இருந்து 8 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது படவேடு.

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.

## கட்டாய சந்தா இல்லை!

## சப்ஸ்கிரைப் இல்லை!!

## மாற்று மத திணிப்பு இல்லை!!!

**தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்**

## ஆன்மிகமலர்.காம் வழங்கும்
## ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் **185** இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# எதிரிகளின் பயம் போக்கும் காலபைரவர்



e-magazine
aanmeegamalar.com

கால பைரவரை வழிபட்டால் வாழ்க்கையில் ஏற்படும் தடைகள் நீங்குவதுடன், எதிரிகளின்பய மும் விலகும்.

எதிரிகளுக்கு பயம் தந்து தன்னை அண்டியவர் களுக்கு அருள் செய்வதால் இவருக்கு பைரவர் என்று பெயர்.

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத் தொழில்களையும் செய்வதால் இவர் “பைரவர்” என்று அழைக்கப்படுகிறார்.

பைரவர் என்றால் பயத்தை நீக்குபவர், அடியார் களின் பாபத்தை நீக்குபவர் என்றும் பொருள் கூறப்படுகிறது. படைத்தல், காத்தல், அழித்தல் அதாவது ஒடுக்குதல் ஆகிய முக்கிய இறையருள் தொழில் களை செய்து பல லட்ச உயிர்களையும் காப்பதால் அவருக்குத் திரிசூலம் அதிகார ஆயுத மாக அளிக்கப்பட்டது.

பைரவர் நீலநிற மேனியராய் சிலம்பொலிக்கும் திருவடிகளை உடையவராய், பாம்புகள் பொருந்திய திருஅரையும், தலை மாலைகள் புரளும் திருமார்பும், சூலம், மழு, பாசம், உடுக்கை இவைகள் ஏந்திய திருக்கரங்களையும் சிவபெருமான் போன்றே மூன்று கண்களையும், இரண்டு கோரப்பற்களை உடையவராய், செஞ்சடை உடையவராய், கோபச் சிரிப்பும், உக்கிர வடிவமும் உடையவராய் காட்சி அளிப்பார் என்று பைரவரின் தோற்றத்தை புராணங்கள் கூறுகின்றன.

அனைத்து சிவாலயங்களிலும் வழிபாடு சூரியனிடமிருந்து ஆரம்பித்து அர்த்தசாமப் பூஜையாக பைரவருடன் முடிவடைகிறது.

இரவு அர்த்தசாமப் பூஜை முடிந்ததும் பைரவருக்



கான சிறப்பு வழிபாடுகள் செய்து ஆலயத்தின் கதவுகளை மூடி ஆலய சாவிக்கொத்தை அவரின் காலடியில் வைப்பது வழக்கம்.

சனீஸ்வரர் பைரவரை வழிபட்டு அவருடைய அருளால் நவக்கிரகங்களில் ஒருவராக கிரகப் பதவி கிடைக்கப் பெற்றார்.

ஆன்மிகமலர் .காம்

ஆகையால் பைரவர் சனீஸ்வரருக்கு குருவாக விளங்கியும் அருள்பாலிக்கிறார். காசியே பைரவரின் பிரதான தலமாகும்.



ஆன்மிகமலர் .காம்

சிவபெருமானின் தலைமைக் காவலரான பைரவரின் தலைமையிடம் காசியில் விசுவநாதர் ஆலயத்தின் வடக்கில் உள்ள பைரவநாத் என்னும் இடத்தில் உள்ள ஸ்ரீகால பைரவர் சன்னதியாகும்.

பிரம்மாவும் திருமாலும் திருவண்ணாமலையில் அடிமுடி தேடியதில் பிரம்மன் பொய்யுரைத்தபடியால் கோபம் கொண்ட சிவனது புருவத்திலிருந்து தோன்றியவரே இந்த ஸ்ரீகால பைரவர்.

கார்த்திகை மாதத் தேய்பிறை அஷ்டமியில் இந்தக் காலபைரவர் அவதாரம் செய்ததால் அந் நாளில் மக்கள் விரதம் இருந்து காலாஷ்டமியாகக் கொண்டாடுகிறார்கள்.

ஆன்மிகமலர் .காம்

கால பைரவரை வழிபட்டால் வாழ்க்கையில் ஏற்படும் தடைகள் நீங்குவதுடன், எதிரிகளின் பயமும் விலகும்.

இவருடைய சன்னதியில் மிருத்யுஞ்ச மந்திரத்தைஓதுபவர்களையும் கேட்பவர்களையும் கண்டு யமன் அஞ்சி நிற்பானாம்.

அச்சரப் பாக்கம் ஆட்சீஸ்வரர் ஆலயத்தில் இருக்கும் கால பைரவர் வித்தியாசமான கோலத் தில் காணப்படுகிறார். மிகச்சிறிய உருவமாக இருந்தாலும் அவர் கழுத்தில் கபால மாலை அணிந்து காணப்படுகிறார்.

அவரது காதில் கடுக்கன் அணிவிக்கப் பட்டு உள்ளது. இத்தகைய அலங்காரத்தில் தமிழகத்தில் வேறு எங்கும் கால பைரவர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவரை வழிபட்டால் கொடுத்த கடன் திரும்ப கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும். தொழில் தொடங்கும் முன்பும் இவரை வழிபட வேண்டும்.

எதிரிகள் தொல்லை நீங்க வேண்டும் என்று நினைப்பவர்கள் அவசியம் இவரை வழிபட்டால் பலன் கிடைக்கும். தேய்பிறை, அஷ்டமி தினத்தன்று இந்த கால பைரவரை வழிபடுவது மிகவும் நல்லது. பூசனிக்காய் தீபம் ஏற்றியும் இவரை வழிபடலாம்.

# முதலில் உன்னைத் தெரிந்து கொள்வதே ஒழுக்கம்

சீடன்: பக்தி எப்பொழுது வருகிறது?

ஞானி: இறைவனைக் காண வேண்டும் என்ற ஏக்கம் வரும் போது.

சீடன்: மஹான்களை தரிசிப்பது எதற்காக?

ஞானி: அதிர்ப்தியை தீர்த்து திருப்தி கொள்ள.

சீடன்: இறைவனிடம் எதிர் பார்ப்பது தவறா?

ஞானி: எதிர் பார்த்தால் பாடுபட வேண்டியிருக்கும்.

சீடன்: நமது வீரம் எப்படி இருக்க வேண்டும்?

ஞானி: நம் குற்றங்களைகளைவதிலே.

சீடன்: எந்த மதக் கடவுளையும் வணங்கலாமா?

ஞானி: அது உன் மனப்பக்குவத்தைப் பொறுத்தது. முசல்மானாகப் பிறந்து கிருஷ்ண பக்தி செய்தார் இலத்தீப் சுவாமிகள். அதனால் இழுக்கு ஏற்பட்டது அவருக்கல்ல. அவரை குற்றம் சொன்னவர்களுக்கு.

சீடன்: இது ஹிந்துவுக்கும் பொருந்துமல்லவா?

ஞானி: உலகிலுள்ள எல்லா பக்தர்களுக்கும் இது பொருந்தும்.

சீடன்: ஆனால் இதை சமுதாயம் ஏற்காதே?

ஞானி: அதைப் பற்றி உனக்கென்ன கவலை? உன் அழுக்கைதுடைக்க முயலும்போது அடுத்தவர் அழுக்கை துடைக்க முயலாதே, உன் அழுக்கு அப்பொழுது அதிகமாகிறது. ஹிந்து முஸ்லீம் வேற்றுமைகளுக்கு இதுவே முக்கிய காரணம்.

சீடன்: இறைவன் இதை விரும்புகிறானல்லவா?

ஞானி: ஏன்? விரும்பினால் நீ உடனே பின்பற்றிப் போகிறாயா? அல்லாவைத் தெரிந்தவர்கள் யார்? அல்லா எங்கே என்று தேடினால் உடனே உன் பெயர் அப்துல்லா; இல்லை, உன் பெயர் பக்தன்.

சீடன்: கிருஷ்ண பக்திக்கும் இது பொருந்துமல்லவா?

ஞானி: எல்லா தெய்வங்களும் இதில் அடக்கமே. மனதைக் கொடுக்காமல் கை கால் கண்ணைக் கொடுத்து கேள்விகள் கேட்டு என்ன பலன்?

சீடன்: அழுக்கு போக மறுக்கிறதே?

ஞானி: உயிரின் மீது விருப்பம் உள்ள கடவுள் அழுக்கைப் பார்ப்ப தில்லை. உயிரோடு அழுக்கு ஒட்டுவதில்லை. அதனால் உடனே கடவுளை விரும்பு.

சீடன்: அது போதுமா?

ஞானி: போதும். ஒவ்வொரு மனிதனும் தன்னிடமுள்ள அழுக்கை பக்தி செய்து துடைக்க முயலட்டும். ஜாதி வேண்டுமா, மதம் வேண்டுமா என்பதை கடவுள் பார்த்துக் கொள்வான்.

சீடன்: இப்படி செய்தால் எல்லா பேதங்களும் ஒழியுமே?

ஞானி: நிச்சயமாக. உயிரைச் சுற்றி அறிவே அன்பாக சுற்றும்போது ஆத்மா அன்பே வடிவாக ஆகிறது. அதுவே கடவுள், பக்தி, சமயம் எல்லாம். அப்பொழுது பேதங்கள் எல்லாம் ஒழியும்.



சீடன்: இதை உலகம் உணருமா?

ஞானி: உண்மையான ஆத்மசாதனைக்குச் செல்பவனை ஆண்ட வன் ஒருவனே உணருகிறான்.

சீடன்: இறைவனை நினைவில்

கொள்ள இந்த எண்ணம் மட்டும் போதுமா?

ஞானி: இந்த எண்ணம் ஒன்று. கோவில், உருவம், மந்திரம், குரு நாதன் இவைகளும் உதவும்.

சீடன்: இந்த உலக மாயையில் இருந்து விடுபட்டால் தானே இது முடியும்?

ஞானி: மாயையை எடு, நான் விளையாடுகிறேன், பக்தனாகிறேன் என்பது சராசரி மனிதனின் நிலை.

சீடன்: தேவி உபாசனையில் உடனடி பலன் என்ன?

ஞானி: சித்தம் நம்மிடம் இருக்க உதவுகிறது. அது நம்மிடம் இல்லாதபோது தான் இன்னது செய்கிறோம் என்று சமாதான நிலையில் கூடத் தெரியாது.

சீடன்: தேவி உபாசனைக்கு குரு மிக முக்கியம் அல்லவா?

ஞானி: எதற்கு குரு வேண்டாம்? உங்கள் மார்க்கத்திற்கு முடிவு வேண்டும் என்று எண்ணி தான் குருநாதர் முன்னிலையில் வந்து அமருகிறீர்கள்.

சீடன்: நம் எண்ணங்களை குருநாதனுக்கு தெரிவிக்க வேண்டாமா?

ஞானி: உங்கள் எண்ணங்கள் உங்கள் பக்தியின் பெருமை குருநாத னுக்குத் தெரியவேண்டிய அவசியம் இல்லை, உங்களுக்கு விளங்க வேண்டும்.

சீடன்: உலக இன்பங்கள் எங்கள் முயற்சிக்கு தடை செய்கிறதே?

ஞானி: சிற்றின்பத்திற்கும், பேரின்பத்திற்கும் உரிய பொருள் கடவுள். வேறு இல்லை என்பதை உணர்ந்தால் தடைகள் விலகும்.

சீடன்: தேவிக்கு வித வித அலங்காரங்கள் செய்கிறார்களே?

ஞானி: அலங்காரம் செய்வதற்கு ஆண்டவனின் நினைவு வேண்டும். நினைவில் இல்லாதவர்களை பூஜை பண்ண முடியாது.

சீடன்: இதனால் சந்தோஷம் முழுமையடையுமா?

ஞானி: எதையாவது உணர்ந்தவர்களுக்கு கொஞ்சம் சந்தோஷம், எல்லாவற்றையும் உணர்ந்தவர்களுக்கு முழுமையான சந்தோஷம், இது தேவியின் அருளால் மட்டுமே கிட்டுகிறது.

சீடன்: கொலு ஏன் இவ்வளவு பெரிதாக கொண்டாடப்படுகிறது?

ஞானி: பூலோக இரகசியம் விழாவாக தான் கொண்டாடப்பட வேண்டும். வெளகீகம், தெய்வீகம் இரண்டும் ஒன்று என்பதுதான் கொலு. இந்த ஒன்பது நாளும் தேவியை உள்ளத்தில் வைத்து புரிந்து கொண்டால் தான் வெளியில் உள்ள தேவியின் கோலங்கள் புரியும்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

e-magazine

aanmeegamalar.com

# உங்கள் பகுதியில் உள்ள கோவில் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள், போன்றவற்றை

# tabloid வடிவில்

4, 8, 12, 16 பக்கங்களில்

**இதுபோன்ற சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்**

தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!




தொடர்ப்பு கொள்ளவும்

அழகுராஜா

முதன்மை செய்தியாளர்

செல்: 9994323622

9444228203

## வனமாக காட்சிதரும் பெருமாள்

**வேதபுராணங்களை உணர்த்தும் ஸ்தலம்**

**108 திவ்யதேசங்களில் முக்கியஸ்தலம்**

# நைமிசாரண்யம்

இதிகாசம் புராணங்களை அறிந்து கொள்ள விரும்பிய தனது பக்தருக்கு பெரியவா கூறிய ஸ்தலத்தைப் பற்றி விரிவாக பார்ப்போம். பெரியவா கூறிய அந்த அற்புத ஸ்தலம், உத்தரப் பிரதேசத்தின் சீதாபூர் மாவட்டத்தில் கோமதி ஆற்றின் பக்கவாட்டில் அமைந்திருக்கிறது. தற்போது இந்த இடத்தை மிஸ்ர் என்று அழைக்கின்றனர். பண்டைக்கால காடு அமைந்திருந்த இடம் என்றும் இந்த இடம் கருதப்படுகிறது.

மேலும், பெரியவா கூறிய நைமிசாரண்யம் என்பது 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றாகும். திருமங்கையாழ்வாரால் பாடல் பெற்ற இத்தலம் லக்னோவிலிருந்து 84 கி.மி., தொலைவில் அமைந்துள்ளது.

இத்தலத்தில் தான் உக்கிரசிரவஸ் என்ற சூத பௌராணிகர், மகாபாரத இதிகாசத்தை குலபதி சௌனகர் தலைமையிலான முனிவர் களுக்கு எடுத்துரைத்தார். இங்கு சக்ரதீர்த்தம் உள்ளது.

இங்கு பெருமாள் வனம் (காடு) உருவில் காட்சி கொடுக்கிறார். வியாச முனிவர் தன் மகன் சுகருக்கு பாகவதம் உபதேசித்த இடம் இது. இங்கு வியாசரால் உருவாக்கப்பட்ட யாககுண்டம் இன்னும் பாதுகாத்து வருகின்றனர்.

இந்து மதத்தை இழிவுபடுத்த நினைத்து வெள்ளைக்கார கிறிஸ்துவ மிஷினரிகளைச் சேர்ந்தவர்கள் மனுதர்மத்தை சிதைத்து, கட்டுக் கதைகளைப் புகுத்தி, மனு தர்மத்திற்கு களங்கம் ஏற்படுத்தினார் கள், இந்துமத துவேஷிகளும்








அவர்களுடன் சேர்ந்து மனு தர்மத்தை இழிவு படுத்தினார்கள்.

ஆனால் உண்மையான மனு தர்மம் தோன்றிய இடமாக இந்த நைமிசாரண்யம் திகழ்கிறது. இங்கு மனுவால் மனு தர்மம் இயற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்துத் தர்மத்தின்படி ஒரு சமயம் தவவலிமை யில் சிறந்த முனிவர்கள் குலபதி சௌகனர்தலை மையில் ஒன்று கூடி 12 ஆண்டுகளில் செய்யக் கூடிய சத்திர வேள்வியைச் செய்ய விரும்பி னர். அதற்கு உகந்த இடத்தை தேர்வுசெய்து தருமாறு முனிவர்கள் பிரம்மனிடம் வேண்டி னர்.

முனிவர்களின் வேண்டுதலுக்கு இனங்க, பிரம்மன் ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்துஅதை ஒரு வளையமாக வளைத்து, அதை கீழே உருட்டி அது எங்கு விழுகிறதோ அதுவே தவம் செய்ய சிறந்த இடம் என்று தெரி வித்தார்.

அவ்வாறு பிரம்மா உருட்டிவிட்ட தர்ப்பைப்புல் கோமதி ஆற்றங்கரையில் உள்ள நைமிசாரண்யம் என்றஇவ் விடத்தில் வந்து விழுந்தது.

இவ்விடமே தமது சத்திர வேள்வியைச் செய்ய உகந்தது என்று முனிவர்கள் தங்களது வேள்வியைத் தொடங்கினர். நேமி என்ற சொல்லுக்கு சக்கரம் அல்லது சக்கர வளையம் என்பது பொருள். நேமி சார்ந்த ஆரண்யம் (காடு) ஆனதால் நேமிச ஆரண்யமாகி நைமிசாரண்யம் ஆயிற்று.

வேள்வியை இவ்விடத்தில் துவங்கிய முனி வர்கள் அதன் முழுப்பலனை திருமாலுக்கு வழங்க எண்ணினர். அவ்விதமே திருமால் குறித்து தவமியற்ற வேள்வியின் இறுதியில் அந்த வேள்வி குண்டத்திலேயே தோன்றி அவிர்ப்பாகம் ஏற்றுக்கொண்டு அம்முனிவர்கட்கெல்லாம் அருள் புரிந்தார் என்பது வரலாறு. இந்தக்கருத்தைப் பின் பற்றியே (அதாவது நைமிச ஆரண்யம் என்ற கருத்தை) இங்குள்ள மக்களும் இறைவன் இங்கு ஆரண்ய வடிவில் கொண்டு







(காடுகளையே உருவமாய்) காட்டையே வணங்கு கின்றனர்.

இத்தலத்தில் இறைவன் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் தேவராஜன் (ஸ்ரீஹரி) என்ற பெயரில் காட்சி தருகிறார். இறைவியின் பெயர் ஸ்ரீஹரிலட்சுமி என்பதாகும். இத்தலத்தின் தீர்த்தம் சக்கர தீர்த்தம் மற்றும் கோமுகி நதி. விமானம் ஸ்ரீஹரி விமானம் என்ற அமைப்பினைச் சேர்ந்தது.

இயற்கை வழிபாடு முறைப்படி பெருமானை வன உருவத்தில் வழிபடும் முறை 108 திவ்ய தேசங்களில் இங்கு மட்டுமே காணப்படுகிறது. இறைவனுக்கு சக்ரநாராயணன் என்றொரு பெயரும் உண்டு. இந்த சக்கர நதிக்கரையில் சக்கரத்தாழ்வார் ராமர், லட்சுமணர், சீதை முதலியோருக்கும் கோவில்கள் உண்டு.

சைவ கோவில்களில் மட்டும் காணப்படும் விநாயகப் பெருமான், இங்கு தனி சன்னதியில் அருள்பாலிக்கிறார். இது வேறெந்த வைணவத் தலத்திலும் இல்லாத சிறப்பாகும்.

இங்கிருந்து கோமுகி நதிக்குப் போகும் வழியில் வியாஸ கட்டி என்ற இடத்தில் வேதவியாசருக்கும் ஆலயம் உள்ளது. வியாச முனிவரும், சுகர் முனிவரும் இங்கிருந்து கொண்டுதான் பாரதம், பாகவதம் புராணங்கள் போன்றவற்றை இயற்றினார்கள் என்பர்.

இதே ஊரில் மற்றொரு புறத்தில் உள்ள குன்றின் மீது அமைந்துள்ள அனுமான் கட்டி என்றழைக்கப்படும் ஆலயத்தில் இராம, லட்சுமணர்களைத் தமது தோளில் தாங்கி எழுந் தருளியுள்ள அனுமார் சிலை ஒன்றும் உள்ளது. திருமங்கையாழ்வாரால் 10 பாசுரங்களால் இத் தலம் பாடல் பெற்றுள்ளது.

சூத பௌராணிகர் உக்கிரசிரவஸ் என்ற சௌதி, குலபதி சௌனகர் தலைமையிலான முனிவர்களுக்கு, மகாபாரதம் மற்றும் புராணங்கள் எடுத்துக் கூறினார்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஸ்தலத்தில், இதிகாச புராணங்களை அறிய விரும்புபவர்களுக்கு மிகப்பெரிய பலன் கிடைக்கும் என்பதால்தான் பெரியவா, தன்னை நாடி வந்த பக்தருக்கு இத் தலத்தின் மகிமையை கூறினார்.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 185 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

eBook FREEDOWNLOAD

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக கட்டணமும் இல்லை



பாருங்கள்... டவுன்லோடு செய்து படியுங்கள்...

## aanmeegamalar.com



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# ஆன்மீக வழியில் அமைதி



நாம் வீணாகப் பேசுவதை விட மௌனம் சிறந்த மொழி ஆகும். நாம் கூறும் வார்த்தைகளை விட மௌனம் சிறந்தது. சுயகட்டுப்பாடு மற்றும் அமைதிக்கான திறவுகோல் மௌனம் ஆகும். புத்தர் மௌனத்தின் சிறப்பு பற்றி மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளார். நீண்ட காலத்திற்கு முன்பு மகத ராஜ்யத்தில் அனுஸ்மான் என்ற இளைஞன் வசித்து வந்தான்.

அவன் பொறுமையற்றவனாகவும் கோபக்கார னாகவும் இருந்தான். எளிமையான கேள்விக்கும் சிறிய விசயங்களுக்கும் விவாதிப்பதும் ஒவ் வொரு கேள்விக்கும் தேவையில்லாமல் பதில் அளிப்பதும் அவனுக்கு வழக்கமாகி விட்டது. அவனுடைய இத்தகைய குணத்தினைக் கண்டு மக்கள் நாளடைவில் அவனிடமிருந்து விலகிச் செல்லத் தொடங்கினர்.

அனுஸ்மானின் குணம் மற்றும் அவனது விதண்டவாதத்தால் அவனுடைய அமைதியை முற்றிலும் அனுஸ்மான் இழந்திருந்தான். அனுஸ் மான் தன்னுடைய கோபம் மற்றும் விதண்டாவாதம் போன்ற குணங்களிலிருந்து எப்படி மாறுவது என்று அவனுக்குத் தெரியவில்லை. ஒருநாள் புத்தர் காட்டிற்கு வந்திருப்பதை அறிந்து அவரை சந்தித்து தன்னோட மனதில் தோன்றும் கேள்வி களை கேட்க வேண்டும். அதற்கு அவரிடமிருந்து தனக்கு தகுந்த பதில் கிடைக்கும் என்று எதிர் பார்த்தான்.

அவன் புத்தரை சந்திக்கும்போது புத்தர் சீடர்களுக்கு மௌனத்தின் முக்கியத்தைப் பற்றி நன்கு விளக்கிக்கொண்டு இருந்தார். மனிதன் வாழ்க்கையில் அமைதியாக இருக்க வேண்டு மானால் அவன் தவறாமல் மௌனத்தைக் கடைப்பிடித்து வர வேண்டும் என்று கூறினார். அதனைக் கேட்ட அனுஸ்மானுக்கு ஒரு நம்பிக்கை பிறந்தது. அவன் புத்தரை வணங்கி வாழ்க்கையில் அமைதியாக வாழ்வதற்குரிய வழிமுறைகளை கூறும்படி வேண்டினான்.

பொறுமையாக இருந்து எனது போதனை களைக் கேட்டு அதன்படி நீ நடக்க சம்ம தித்தால் நான் கூறுகிறேன் என்று புத்தர் கூறினார். அனுஸ்மான் உனது குணம் மற்றும் செயல்களை பற்றி மற்றவர்களிட மிருந்து விமர்சனங்கள் வரும்போது நீ

87

e-magazine
aanmeegamalar.com

பொறுமையாக மௌனமாக இருக்க வேண்டும். மௌனமாக இருக்கும்போது அந்த விமர்சனங்கள் உனக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்கும். அதற்கு மாறாக விமர்சனங்களுக்கு நீ கோபமாக பதில் அளித்தால் செயல்புரிந்தால் நீ மௌனத்தின் பயனை அடைய முடியாது.

அதாவது உனது மனம் அமைதியாக இருக்க முடியாது என்று கூறினார். மௌனமாக இருந்து விமர்சனங்கள் பற்றி சிந்தித்து அவை சரியானதா? என்பது பற்றி பொறுமையாக நினைத்துப் பார்க்க வேண்டும்.

புத்தர் அஸ்மானிடம் தன்னுடைய வாழ்வில் நடந்த சம்பவத்தைப் பற்றி கூறினார். நான் சீடர்களுடன் காட்டு வழியே நடந்து செல்லும்போது ஒருவன் தன்னைத் தொடர்ந்து வந்து தரக்குறைவாகப் பேசினான். நான் பொறுமையாக மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தேன்.

அவன் பேசி முடித்தவுடன் அவனிடம் நீ ஒருவனுக்கு விரும்பி கொடுக்கும் பரிசை அவன் வாங்குவதற்கு மறுத்தால் நீ என்ன செய்வாய் என்று கேட்டேன். அவன் பரிசை ஏற்க மறுத்தால் பரிசுப்பொருளை நானே வைத்துக் கொள்வேன் என்றான்.

அதேபோல்தான் நீ இப்போது என்னைப்பற்றி என்னிடம் கூறிய வார்த்தைகளையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அவன் அதனைப் புரிந்து கொண்டு தலை குனிந்து சென்று விட்டான். இதனை நாம் கடைபிடிப்பது கடினம். பொதுவாக நாம் உணர்ச்சி மிகுதியில் கோபப்படாமல்பொறுமையாக மௌனமாக இருந்து பழகி விட்டால் நம்மை நாமே சுயபரிசோதனை செய்து கொள்வதற்கு முடியும் என்று விளக்கினார். மனிதர்கள் விவாதங்களின்போது மௌனமாக இருந்தால் எதிலும் வெற்றி பெறுவதற்கு முடியும். அப்படிப்பட்ட மனிதர்களுக்கு அமைதியும் கிடைக்கும். நாம் மௌனமாக இருக்கும்போது சரியான முடிவை எடுக்க முடியும்.

புத்தரிடம் ஒரு சமயம் இரு விவசாயிகள் வந்தார்கள். இருவரும் ஒரு நிலத்தை தங்களது என்று ஒருவருக்கொருவர் விவாதம் செய்துகொண்டு உரிமை கொண்டாடினர். அப்போது புத்தர் அவர்களிடம் நீங்கள் பிறக்கும்போது இந்த நிலத்தைக் கொண்டு வந்தீர்களா? அல்லது நீங்கள் இறக்கும்போது இந்த நிலத்தை உங்களோடு எடுத்து செல்வீர்களா? என்று கேட்டவுடன் இருவரும் புரிந்து கொண்டனர். விவாதம் செய்வதை நிறுத்தி விட்டு அமைதியாக சென்றார்கள்.

விவாதங்களின்போது அதிகமாக பேசுவதை விட பொறுமையைக் கடைப்பிடித்து மௌனமாக இருப்பது பயனுள்ளது என்ற ஒரு போதனையை அனுஸ்மானுக்கு கற்றுக்கொடுத்தது.

ஒருவர் கோபமாக இருக்கும்போது நாம்மௌனமாக இருந்து பழக வேண்டும். கோபம் என்பது நெருப்பைப் போன்றது. அது நெருப்புபோல் பற்றிக் கொள்ளும். கோபம் கடந்த பிறகு மௌனமாக இருந்து பேசினால் இருவருக்கும் நல்லது. ஒருவன் பொறுமையாக மௌனமாக இருந்தால் அவனது கோபத்தின் சக்தி தானாகவே குறைந்து விடும். அதாவது நமது மனம் அமைதி அடைந்து விடும் என்பதை அனுபவம் மூலம் உணரலாம்.

இதற்கு புத்தர் ஒரு கதை கூறினார். மன்னன் ஒருவன் தன்னோட மந்திரி செய்த குற்றத்திற்காக கோபத்துடன் தூக்கிலிடக் கட்டளையிட்டான். அதைக்கேட்ட மந்திரி தன்னோட விதியை நினைத்து மௌனமாக இருந்தார்.

மன்னன் தனிமையில் இருக்கும்போது மந்திரிக்கு கொடுத்த தண்டனையை நினைத்து மிகவும் வருந்தினான். உடனே தண்டனையிலிருந்து மந்திரியை விடுவித்தான். மன்னன் கோபப்படும்போது மந்திரி ஏதேனும் பேசியிருந்தால் மன்னனின் கோபம் மேலும் அதிகரித்து அவனது உயிர் போயிருக்கும். மந்திரியின் மௌனம் அவனது உயிரைக் காப்பாற்றியது.

அஸ்மான் ஒருநாள் வருத்தத்துடன் காணப்பட்டான். அவன் புத்தரிடம் தனது துக்கத்தைத் தாங்க முடியவில்லை என்றான். புத்தர் அவனிடம் உனக்கு துக்கம் வரும்போதெல்லாம் மௌனமாக இருந்து விடு. மனிதனது துக்கம் அவனுக்கு படிப்பினைக் கொடுக்கலாம். இதனை உணர்ந்து ஒருவன் மௌனமாக இருந்தால் அவனது துக்கம் அவனுக்கு பயனுள்ள சிந்தனையாக மாறும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

ஒருவன் உன்னை வேண்டுமென்று தேவையில்லாமல் விமர்சிக்கும்போது மௌனமாக இருந்து விடு.

உனது பொறுமை மற்றும் வலிமையையும் அது காட்டும். அதன்மூலம் நீ ஒரு அனுபவத்தையும் பெறுவதற்கு முடியும். உன்னோடு அமைதிக்கும் அது வித்திடும். எடுத்துக்காட்டாக ஒரு துறவியை பொதுமக்கள் சிலர் கல்லால் அடித்தார்கள். அந்த துறவி எதிர்ப்பு தெரிவிக்காமல் மௌனமாக அதனைப் பொறுத்துக் கொண்டார். அவருடைய

e-magazine
aanmeegamalar.com



பொறுமையை மௌனத்தை உணர்ந்த பொது மக்கள் அமைதியாக கலைந்து சென்றனர். அவருடைய மௌனம் பொதுமக்கள் மனதை ஒரு நொடிப்பொழுதில் மாற்றி விட்டது.

எல்லா இடங்களிலும் பிறருக்கு உதவ வேண்டியதில்லை. அதேபோல் தேவை யில்லாதபோது உன்னுடைய அறிவுரைகளை அல்லது போதனைகளை பிறர் கேட்காதபோது நீ மௌனமாக இருந்து பழகு. அவ்வாறு இருப்பது வீண் விவாதங்களை தவிர்க்கலாம். உன்னுடைய அறிவுரைகளை போதனைகளை மற்றவர்கள் மீது வலிய திணிக்க நினைக்கக்கூடாது. அப்போ தெல்லாம் நீ மௌனமாக இருந்தால் உனக்கு மிகவும் நல்லது.

உன்னுடைய அறிவைப்பற்றி பிறர் பெருமையாக கூறும்போது மௌனமாக இருப்பது நல்லது. அறிவு பணிவின் ஆரம்பம் ஆகும். அறிவை பிரசுரம் செய்தால் அது பொம்மைபோல் ஆகி விடும் என்பதை உணர்ந்து கொள்.

யாராவது நீ கூறும் உண்மையை ஏற்றுக் கொள்ள தயங்கும்போது அல்லது ஏற்க மறுக்கும் போது மௌனமாக இருக்கப் பழகு. உண்மையை ஏற்கும்வரை நீ அவரிடம் விவாதிப்பது உன்னோட சக்தியும் நேரமும் வீணாக்கப்படுகிறது. எனவே உன்னோட சக்தி நேரம் வீணாக்காமல் மௌன மாக இருப்பது நல்லது.

எடுத்துக்காட்டாக ஒரு துறவி மன்னனிடம் உண்மையின் வலிமை பற்றி கூறினார். அப்போது மன்னன் அதனை ஏற்றுக்கொள்ளாமல் துறவியை கோபத்துடன் வெளியே போகும்படி கூறினான். துறவி அதற்கு மறுப்பு ஏதும் கூறவில்லை.

மன்னா நீ நான் கூறும் உண்மையை ஏற்றுக் கொள்ளத் தயாராகும்போது நான் வருவேன் என்று கூறிச் சென்றார். மன்னன் சில ஆண்டுகள் கழித்து துறவி கூறிய உண்மையை சிந்தித்து ஏற்றுக்கொண்டார். துறவியின் பொறுமை அவரது மௌனம் மன்னன் உண்மையை ஏற்றுக் கொள்ளும்படி செய்தது.

சூழ்நிலைகள் மனிதர்கள் கட்டுப்பாட்டில் இல்லாதபோது மௌனமாக இருக்க வேண்டும். பொதுவாக சூழ்நிலைகள் சரியில்லாதபோது மனிதர்களுக்கு கோபம் ஏற்படும். அதனால் உன்னை இழந்து விடுவாய் என்பதை நீ உணர்ந்து கொள்ள வேண்டும். உனக்கு சூழ்நிலைகள் சரியில்லாதபோது மௌனமாக இருப்பதே மிகுந்த அறிவுள்ள செயலாகும். மௌனமாக இருப்பது பலவீனம் அல்ல. அது பலம் என்பதை உணர்ந்து மௌனத்தை கடைப்பிடிக்க கற்றுக் கொள்ளுங்கள் என்று புத்தர் போதித்தார்.

ஒரு விவசாயி புத்தரிடம் மழையில்லை என்று வருத்தப்பட்டார். புத்தர் அவரிடம் மழையை நீ கொண்டு வர முடியாது. அதாவது சூழ்நிலையை உன்னால் மாற்ற முடியாது. ஆனால் வருத்தப்படும் உனது மனநிலையை மாற்றிக்கொள்வதற்கு முடியும். அதாவது மழையில்லை என்ற உனது மனநிலையை மாற்றிக் கொள்வதற்கு முடியும். அதற்கு வேறு ஒரு தீர்வைக் காண முடியும்.

அதன்மூலம் உனது வருத்தப்படும் சூழ்நிலை மாறும். சூழ்நிலை மாறும்வரை மௌனமாக இரு என்று புத்தி கூறி அனுப்பினார் புத்தர்.

உன் இதயம் ஒரு திறவுகோல். மனிதர்களே இதயத்தில் அன்பு நன்றி போன்றவற்றால் நிரப்பு. இதற்கு வார்த்தைகள் தேவையில்லை. மௌனமாக இரு. சூழ்நிலையில் மௌனம் ஒரு மொழியாகவே மாறி விடும். மௌனம் ஆன்மா வின் வெளிச்சம். ஆன்மாவின் குறியீடு ஆகும் என்பதை உணர முடியும் என்று புத்தர் போதித்தார்.

– அமைதி தொடரும்

எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
Tahsildar (Retd)
கைபேசி:
9894043308

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from
No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 176 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை

பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...




eBook FREE DOWNLOAD

## aanmeegamalar.com




தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com